Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 29 செவ்வாய்க்கிழமை (12.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

### முன்னாள் இராணுவ அதிகாரிகள்
# அமைச்சுக்களுக்கு செயலாளர்களாக கோட்டாவால் நியமனம்

*(கொழும்பு)* ஏழு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் முன்னாள் இராணுவ அதிகாரிகள் ஆவர். (15ஆம் பக்கம் பார்க்க)



## பாடசாலைகளை திறக்க ஒரு மாத காலமாகலாம்
### கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலை 15

### பஸ்கள், ஓட்டோக்களில் பயணிப்போர்
## சந்தைகளுக்கு வருவோர் பொது இடங்களில் கூடுவோருக்கு
### கொரோனா சோதனை மேற்கொள்ள ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை

(கொழும்பு)

கொரோனா நோய்த் தொற்று டையவர்கள் உருவாக என்ன காரணம் என் 15

### பொதுத் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க
# அரசியல் கட்சிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று சந்திப்பு
## வைரஸ் பரவல் குறித்தும் ஆராய்வு

*(கொழும்பு)*

**பொதுத் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது.**

**ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான சூழல் குறித்தும் தொடர்ச்சியாக தேர்தல்கள் ஆணைக்குழு அதிகார மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தும் வருகின்றது.**

ஜூன் மாதம் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படுவது குறித்தும் அவ்வாறு தேர்தலை நடத்துவதற்கான சூழல் நிலவுகின்றதா என்பதை அறிந்து கொள்ளவும் அரச அதிகாரிகள் மட்டத்தினால் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்ற நிலையில் இன்றும் அவ்வாறான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு காரணிகள் குறித்து இந்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. 15

### புதுக்குடியிருப்பில்
## புலிகளின் சீருடைகள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - 15

## கொரோனா 863

(கொழும்பு)

நாட்டில் பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 863 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் மேலும் 7 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் 15

### ஊரடங்கு தளர்த்தப்பட்ட சில மணிநேரத்தில்
## நல்லூர் முத்திரைச்சந்தியில் வாள்வெட்டு; இருவர் படுகாயம்
### ஆட்டோ, மோ.சைக்கிளும் சேதமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த வாள்வெட்டுக்குழுவினரால், மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் இருவர் படுகாயமடைந்ததுடன், மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டு சில மணி நேரங் 15

### ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்திய
## சுமந்திரனின் கருத்து மன்னிக்க முடியாத தவறு
### செல்வம் அடைக்கலநாதன்

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமொத்த ஆயுதப் போராட்டத்தையும் தவறு என்று சிங்கள ஊடகம் ஒன்றிற்கு சுமந்திரன் கருத்து தெரிவித்துள்ளமை மன்னிக்க முடியாத தவறு என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"ஆயுதப் போராட்டத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்தை பணிய வைத்து அரசியல் ரீதியாக பேசுவதற்கான ஓர் அங்கீகார மாகவே தமிழ்த் தேசிய 15

### விமான சேவைகளை
## மீண்டும் ஆரம்பிக்க அரசு தீர்மானம்
### அமைச்சர் பிரசன்ன

(கொழும்பு)

இலங்கைக்கான விமான சேவைகளை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 15

## கொரோனா அச்சம் நீங்கவில்லை வீதிகளில் நடமாடுவதை தவிருங்கள்
### யாழ்.மக்களுக்கு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடுவதை தவிர்க்குமாறு மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் நல்லிணக்க மையம் நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 15

## கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து சுமந்திரனை நீக்குக
### சாள்ஸ் நிர்மலநாதன் சம்பந்தனுக்கு நேற்று அவசர கடிதம்


(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கூறும் கருத்துக்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று திங்கட்கிழமை 15

# வட பகுதியில் தென்னைகளை அழித்தொழிக்கிறது செவ்வண்டு

## தென்னந்தோட்ட செய்கையாளர்கள் கவலை



(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தென்னைகளை செவ்வண்டுகள் தாக்கிவருவதால் வடபகுதி தென்னை செய்கையாளர்கள் தலையில் கை வைக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரியாலை, பளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் செவ்வண்டுத் தாக்கத்தால் தென்னைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

பாளை வருகின்ற பருவத்தில் உள்ள தென்னைகளை செவ்வண்டுகள் தாக்குவதால் அவை அடியோடு சரிந்து விழுகினறன.

இதனால் தென்னைச் செய்கையாளர்கள் தலையில் கைவைக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் இது குறித்து தென்னைப் பயிர்ச்செய்கையுடன் தொடர்புபட்ட அமைப்புகள் அதிரடி நடவடிக்கை எடுத்து தென்னைச் செய்கையாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென பாதிக்கப்பட்ட தென்னைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# போரை முடிவுக்கு கொண்டுவந்ததற்காக சுமந்திரன் அரசுக்கு பாராட்டு தெரிவித்திருந்தார்

## முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான கொள்கை, தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசிய நீக்கம் என்ற விடயத்தினை மக்கள் விளங்கிக் கொண்டு அவர்களை எப்போது முற்று முழுதாக நிராகரிக்கிறார்களோ அப்போது தான் தமிழ்த் தேசிய அரசியலில் உரிமைப் போராட்டத்தில் ஆக்கபூர்வமான பயணம் ஒன்றை எம்மால் மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவில் பகுதியிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக்கையில் சில நாட்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ ஊடக பேச்சாளர் சுமந்திரன் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் பல விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெளிப்படுத்தினார்.



ஆயுதப் போராட்டத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் இலங்கையின் சிங்கக் கொடியையும், இலங்கையின் தேசிய கீதத்தையும் ஏற்றுக் கொள்வதாகவும் பேட்டியின் போது குறிப்பிட்டார்.

எனினும் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் திருமறைக் கலாமன்றத்தில் எனக்கும் சுமந்திரனுக்கும் இடையே விவாதமொன்று நடைபெற்றது.

அவ்விவாதத்தின் போது இந்த ஆயுதப் போராட்டத்தை ஒரு அதர்மமாக பார்ப்பதாக தெரிவித்திருந்தார் என்பதை இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

இன்று தேர்தல் களமொன்று இருக்கின்ற சந்தர்ப்பத்திலேயே அதே கருத்தை வலியுறுத்தினார்.

குறிப்பாக சம்பந்தன் அவர்கள் போர் முடிந்தபின் பாராளுமன்றம் கூட்டப்பட்ட போது பாராளுமன்றத்திற்கு சென்று ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக பாராட்டுக்கள் தெரிவித்திருந்தார். ஆனால் இதை சம்பந்தன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் அவர்களின் அமைப்பும் பயங்கரவாத, ஈவிரக்கமில்லாத அமைப்பு என்று பல தடவை பல இடங்களில் கூறியிருந்தார். ஒரு தேர்தல் பின்னணி இருக்கின்ற காலகட்டத்திலே இந்த ஆழமான கருத்துக்களை மக்கள் உள்வாங்கி செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3.8.18)


## சேவை நலன் நயப்பு பாராட்டு

யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை அதிபராக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி தனது அறுபது அகவையில் 12.05.2020 இல் ஓய்வு பெறும்



### திரு. சரவணை கிருஷ்ணன்

Sp.Trained - Primary Edu. SLPS - III

சேவை நலன் நயப்பு பாராட்டுப் பா

சேவைகள் பல புரிந்து
சமூகத்தின் தேவையே
தன் தேவையாகக் கருதி
சமூகமும் பாடசாலையும் நலம் பெறும் வகையில்

வரலாற்றுப் பாட ஆசிரியராக
பாடசாலை அதிபராக பல சமூக பணிகளாற்றி
சமூக பட்டங்கள் பதவிகள் பலபெற்று
இன்றும் இளமைத்துடிப்புடன்
வலம் வந்திடும் மணிவிழா நாயகனை
ஓய்வு பெறும் இந்நாளில்
மனதார வாழ்த்துகின்றோம்.

வளர்மதி கல்விக் கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள். மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

(2812)



## வேலை வாய்ப்பு

### தங்கம்மா முதியோர் இல்லம் புதுக்குளம் கனகராயன்குளம்.

01. பராமரிப்பாளர் / காவலாளி

(வயது 55 - 65 வரை)

தொழில் முதியோர் இல்லத்தில் உள்ள சிறு தோட்டங்கள், கட்டிடங்கள், முற்றங்கள் போன்றவற்றை பராமரித்தல்.

- 01. இல்லத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
- 02. இருப்பிட வசதி, உணவு இலவசமாக வழங்கப்படும்.
- 03. நியாயமான வேதனம் வழங்கப்படும்.
- 04. 15.05.2020 க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்.

02. இல்லத்திற்கு வயோதிபர்களைச் சேர்த்தல்.

- 01. 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். (ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
- 02. கடுமையான நோயாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.
- 03. அங்கவீனமானவர்கள் தகுதியுடையவர்கள்.
- 04. உணவு, உடை, இருப்பிடம், அடிப்படை மருத்துவ வசதிகள் தாராளமாக வழங்கப்படும்.

03. தனிப்பட்ட நவீன அறைகள் வாடகைக்கு உண்டு.

- 01. தனிப்பட்ட அறைகளுக்கு குறைந்த பட்சம் வாடகை மாதாந்தம் செலுத்தப்பட வேண்டும்.
- 02. உணவு, அடிப்படை மருத்துவ வசதி இலவசமாக வழங்கப்படும்.

**உடன் விண்ணப்பிக்கவும்**

முடிவுத் திகதி : 20.05.2020

Dr.குணசிங்கம் 076 248 2766 தவம் 077 449 9619



# தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பாக மன்றில் ஆஜராக சட்டமா அதிபர் மறுப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராக முடியாத நிலையில் உள்ளதாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ள திகதியை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைக்கே இவ்வாறு ஆஜராக முடியாது என அவர் அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை, கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பான நிலையைக் கருத்திற்கொண்டு ஜூன் 20 அன்று நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது. இருப்பினும், இவ்வாறு அறிவிக்கப்பட்ட திகதி அரசியலமைப்பிற்கு முரணானது எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் இன்னும் கட்டுப்பாட்டிற்குள் வராததால் தேர்தலை நடத்த உகந்த சூழல் நாட்டில் ஏற்படவில்லை என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# ஊரடங்கை மீறிய 51,552 பேர் கைது 13,350 வாகனங்களும் பறிமுதல்

(கொழும்பு)

பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று அதிகாலை 5 மணியுடன் நிறைவுக்கு வந்த கடந்த 24 மணி நேர காலப் பகுதியில் 799 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் இந்தக் கால கட்டத்தில் 206 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதன்படி மார்ச் 20 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 51 ஆயிரத்து 552 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் காலகட்டத்தில் 13 ஆயிரத்து 350 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

23 மாவட்டங்களுக்கு விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவானது நேற்று அதிகாலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்டதுடன், இரவு 8 மணிக்கு மீளவும் பிறப்பிக்கப்படும்.

எனினும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவானது மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# சீனாவிலிருந்து வெளியேறிய முதலீட்டாளர்களைக் கவர இலங்கைக்கு சிறந்த வாய்ப்பு

## சஜித் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சீனாவிலிருந்து தற்போது பெருமளவான முதலீட்டாளர்கள் வெளியேறியிருப்பதால் அவர்களை முதலீடு செய்வதற்காக எமது நாட்டை நோக்கிக் கவர்வதற்கான சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார். கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காரணமாக பொருளாதாரம் ஸ்தம்பிதமடைந்திருக்கும் நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# விமான சேவைகள் ஜூனில் ஆரம்பம்

## அமைச்சர் பிரசன்ன தகவல்



(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் .தொடக்கம் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

எனினும் நாட்டுக்குள் உள்நுழையும் சகல பயணிகளையும் பரிசோதனை செய்யும் விசேட வேலைத்திட்டம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கடந்த 45 நாட்களுக்கு அதிகமான காலம் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் விமான சேவைகளை வழமைக்குக் கொண்டுவரும் திட்டங்கள் குறித்து அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ள காரணத்தால் நாட்டுக்குக் கிடைக்கவிருந்த மிகப்பெரிய வருமானம் இல்லாது போயுள்ளது.

குறிப்பாக சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ள காரணத்தால் பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புக்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

எனினும் இப்போது நாடு மீண்டும் வழமைக்குக் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டன.

பொருளாதார கார்ரணிகளைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எனவே அதற்கமைய விமான சேவைகளையும் வழமைக்கு கொண்டுவர வேண்டும் என்ற விடயத்தை நாம் முன்வைத்துள்ளோம்.

மீண்டும் விமான சேவைகளை முன்னெடுப்பது குறித்து அரசாங்கம் சுகாதார அதிகாரிகளுடன் பேசி ஒரு தீர்மானம் எடுக்கவுள்ளது.

எவ்வாறு இருப்பினும் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் இலங்கைக்கான விமான சேவைகள் வழமைக்குக் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதற்கான விதத்தில் இப்போதிருந்து விமான நிலையங்களின் பராமரிப்பு மற்றும் பயணிகளை கண்காணிக்கும் மருத்துவ இயந்திரங்களை பொருத்துவது குறித்தெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் இலங்கை பயணிகள் அதேபோல் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகள் என சகலருக்கும் மருத்துவ பரிசோதனைகளை முன்னெடுப்பது குறித்தும், விமான பயணங்களில் சில சில மாற்று நேர அட்டவணைகளை கையாளவும் தீர்மானம் எடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள்

## மீறினால் அனுமதி ரத்து!



(சாவகச்சேரி)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்ச நிலைமை காரணமாக சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு சுகாதாரப் பிரிவினர் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தனர்.

அந்த வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தென்மராட்சிப் பகுதி சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்களை நேற்றுத் திங்கட்கிழமை காலை தென்மராட்சியில் மூன்று இடங்களில் நடத்தியிருந்தனர்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கான கூட்டம் சாவகச்சேரி நகர சபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தளிர்ராஜ் தலைமையில் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் படிமுறைகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

அதாவது முடி திருத்தல் மற்றும் முடிக்கு சாயம் பூச மாத்திரமே அனுமதி. முகச் சவரம் செய்ய முடியாது. காய்ச்சல் அறிகுறி உள்ள / தனிமைப்படுத்தலில் இருந்த பணியாளரை அல்லது வாடிக்கையாளரை வைத்தியச் சான்றிதழ் கிடைக்கும் வரை கடைக்குள் அனுமதிக்கக்கூடாது.

நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். பணியாளர் மற்றும் வாடிக்கையாளர்கள் சவர்க்காரம் இட்டு கை கழுவக்கூடிய வசதி கடையின் உள் மற்றும் வெளிப் பகுதியில் இருக்க வேண்டும்.

பணியாளர் முகக்கவசம் மற்றும் பாதுகாப்புக் கண்ணாடி அணிய வேண்டும். நிலையத்தில் காலினால் செயற்படுத்தக்கூடிய கழிவுக் கூடைகள் இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களை குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியில் காத்திருக்க வைக்க வேண்டும். இட வசதிக்கேற்ப காத்திருக்கும் வாடிக்கையாளர்களை மட்டுப்படுத்த வேண்டும். நிலையத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பார்வைக்கு காட்சிப்படுத்தக் கூடாது.

பணியாளர் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சேவை வழங்கிவிட்டு ஓடும் நீரில் கை கழுவிய பின்னரே அடுத்தவருக்கு சேவை வழங்க வேண்டும்.

முடி திருத்தும் போது வாடிக்கையாளரின் பின்புறம் / பக்கவாட்டில் நின்றே முடி திருத்த வேண்டும். ஒருவருக்கு சேவை வழங்கிய பின் பயன்படுத்தும் உபகரணங்களை தொற்று நீக்கம் செய்ய வேண்டும். அத்துடன் ஒருவருக்கு சேவை நிறைவடைந்ததும் அவர் இருந்த கதிரையும் தொற்று நீக்க வேண்டும்.

கழிவுகளை பை ஒன்றில் பாதுகாப்பாக கட்டி வைத்து அகற்ற வேண்டும். ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தனித்தனியான துணி பயன்படுத்த வேண்டும். (வாடிக்கையாளர்களை வீட்டில் இருந்தே துணி கொண்டுவர ஊக்கப்படுத்த வேண்டும்)

நிலையத்தினுள் குளிரூட்டிகள் மற்றும் வளி சீராக்கிகள் பயன்படுத்த முடியாது. கதவு, ஜன்னல்கள் திறந்து காற்றோட்டமாக இருக்க வேண்டும்.

சேவை பெறும் வாடிக்கையாளர்களின் விபரங்களை திகதி மற்றும் நேரத்துடன் குறித்தல் வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதிச் சான்றிதழ் நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

குறித்த நடைமுறைகள் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் ஏற்படுத்தப்பட்ட பின்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பார்வையிடப்பட்டு பின்னர் சுகாதார வைத்திய அதிகாரியால் நிலையத்தை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

அதுவரை சேவை வழங்க முடியாது. மேற்குறிப்பிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-30)

# லிபியா விமான நிலையம் மீது குண்டு வீச்சு! விமானங்கள், எரிபொருள் கிடங்குகள் சேதம்





(திரிபோலி)

லிபியா விமான நிலையம் மீது குண்டு வீச்சு தாக்குதல் நடந்தது. இதில், விமானங்களும், எரிபொருள் கிடங்குகளும் சேதமடைந்தன.

கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து லிபியாவில் குழப்பம் நிலவி வருகிறது. அப்போது நடந்த உள்நாட்டுக் கலவரத்தில், நீண்ட கால சர்வாதிகாரியான கடாபி, ஆட்சியை விட்டு நீக்கப்பட்டார். பிறகு அவர் கொல்லப்பட்டார்.

பின்னர், கிழக்கு, மேற்கு என்று இரு பிரிவாக லிபியா உடைந்தது. தலைநகர் திரிபோலி உள்ளிட்ட மேற்கு பகுதிகள், ஐ.நா. ஆதரவு பெற்ற நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த நிர்வாகத்தை துருக்கி, கட்டார் ஆகிய நாடுகள் ஆதரிக்கின்றன.

கிழக்குப் பகுதி, இராணுவ உயர் அதிகாரி காலிபா ஹிப்டருக்கு விசுவாசமான படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்களை ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து ஆகிய நாடுகள் ஆதரிக்கின்றன. தலைநகர் திரிபோலியைக் கைப்பற்றும் நோக்கத்தில், கடந்த ஓராண்டாக கிழக்குக் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. உலக நாடுகள் வற்புறுத்தியும் சமாதானம் ஏற்படவில்லை.

இந்நிலையில், தலைநகர் திரிபோலியில் இயங்கி வரும் ஒரே விமான நிலையமான மிடிகா சர்வதேச விமான நிலையம் மீது கிழக்குப் பகுதி படைகள் சரமாரிக் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தின.

பீரங்கியாலும் தாக்குதல் நடத்தின. இதில், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பயணிகள் விமானங்கள் சேதமடைந்தன. அதில் ஒரு விமானம், ஸ்பெயின் நாட்டில் சிக்கித்தவிக்கும் லிபிய மக்களை அழைத்து வருவதற்காக புறப்படத் தயார்நிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தத் தாக்குதலில் விமான எரிபொருள் கிடங்குகளும் தீப்பிடித்து எரிந்தன. தகவல் அறிந்து வந்த தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அதே சமயம், திரிபோலியின் மற்ற பகுதிகளிலும் கிழக்குப் படைகள் தாக்குதல் நடத்தின. ஆங்காங்கே ஏவுகணைத் தாக்குதல் நடந்தது. குடியிருப்புப் பகுதிகளிலும் ஏவுகணைகள் விழுந்தன. இதில், 3 பேர் பலியாகினர். 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு கிழக்குப் பகுதி படைகள் மீது ஐ.நா. ஆதரவு தூதரகம் குற்றம் சாட்டியது. குடியிருப்புப் பகுதியில் 100 ஏவுகணைகளை வீசியதாக கூறியது. இந்த மாதம் மட்டும் அப்படைகள் நடத்திய தாக்குதலில் 15 பேர் பலியாகியிருப்பதாக தெரிவித்தது. இந்தத் தாக்குதல் குறித்து கிழக்குப் பகுதி படைகள் எதுவும் தெரிவிக்கவில்லை. தங்கள் மீது தாக்குதல் நடத்தவே மிடிகா விமான நிலையத்தை துருக்கி பயன்படுத்தி வருவதாக கிழக்குப் பகுதி படைகள் ஏற்கனவே குற்றம் சாட்டி வந்தன.

எனவே, இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (இ-7)

# கொரோனா கண்கள் வழியாகவும் பரவலாம்

## அமெரிக்க ஆய்வாளர்கள் தகவல்

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் கண்கள் வழியாகவும் பரவலாம் என்பதை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பொதுவாக, கொரோனா வைரஸ் ஒருவரைத் தாக்கவேண்டுமானால், அவரது உடலில் அந்த வைரஸை ஏற்றுக்கொள்ளும் ஒரு விடயம் இருக்கவேண்டும்.

அறிவியல் ரீதியாக கூறினால், ACE-2 receptors என்ற என்சைம் எங்கு இருக்கிறதோ, அந்த வழியாகத்தான் இந்த கொரோனா வைரஸ் உடலுக்குள் நுழையும்.

ஆகவே, இந்த ACE-2 receptors என்ற என்சைம் இருக்கும் இடம், உடலிலுள்ள செல்களின் வாசல் என்று அழைக்கப்படுகிறது.

இந்த என்சைம், சுவாசக்குழாய் மற்றும் நுரையீரலில் பொதுவாக காணப்படுவதுண்டு. ஆனால், அதே என்சைம் கண்களிலும் உருவாக்கப்படுகிறது என்ற உண்மையை, அமெரிக்காவின் Johns Hopkins பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியலாளர்களை தலைமையாகக் கொண்ட ஒரு குழு கண்டறிந்தது.

இதன் பொருள் என்னவென்றால், கொரோனா தொற்றிய ஒருவர் தும்மும்போது தெறிக்கும் நீர்த்துளிகள் மற்றொருவரது கண்ணில் படுமானால், அவருக்கும் கொரோனா தொற்ற வாய்ப்புள்ளது.

கொரோனா நோயாளிகளை ஆராய்ந்தபோது, அவர்களில் சிலருக்கு கண் நோய் (conjunctivitis) இருந்ததற்கான காரணம் இப்போதுதான் தெரியவந்தது.

இன்னொரு விடயம், கொரோனா வைரஸ், கண்கள் வழியாக பரவுவது மட்டுமல்லாமல், ஒருவரது கண்ணீர் மூலமாகவும் பரவலாம் என்பதும் இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.நா.பாதுகாப்பு சபையில் கொரோனா தீர்மானத்துக்கு அமெரிக்கா முட்டுக்கட்டை

## சீனா குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் உலக சுகாதார நிறுவனத்தின் பணிகளுக்கு பாராட்டு தெரிவிக்கும் தீர்மானத்துக்கு அமெரிக்கா முட்டுக்கட்டையாக இருப்பதாக சீனா குற்றம் சாட்டியது.

கொரோனா வைரஸுக்கு எதிரான போரில், உலக சுகாதார நிறுவனத்தின் பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் நிறைவேற்ற உலக நாடுகள் விரும்புகின்றன. ஆனால், அதற்கு அமெரிக்கா முட்டுக்கட்டையாக இருப்பதாக சீனா குற்றம் சாட்டியது.

இதுகுறித்து சீனத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

இந்தத் தீர்மானத்தை பிரான்ஸ், துனியா ஆகிய நாடுகள் வடிவமைத்துள்ளன. ஐ.நா.பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுகள் அதை ஆதரிக்கின்றன. சீனாவும் ஆதரிக்கிறது. அமெரிக்கா முதலில் ஆதரித்தது.

ஆனால், பிறகு பின்வாங்கி விட்டது. முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இதனால், இந்தத் தீர்மானத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிறைவேற்ற முடியவில்லை. ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ஒற்றுமையைக் குழிதோண்டிப் புதைத்து வருகிறது. இன்றைய நிலைக்கு அமெரிக்காவே முழுப் பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியாவில் ஒரே நாளில் 4213 பேருக்குத் தொற்று

## 67 ஆயிரத்தைக் கடந்த கொரோனா பாதிப்பு

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 67 ஆயிரத்தைக் கடந்த நிலையில், 2206 பேர் மரணமடைந்தனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம் பெறுகின்றன. இதேவேளை கொரோனா பாதிப்பு குறைவாகவுள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் கணிசமாக உயர்கிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் 67 ஆயிரத்து 152 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். நேற்றுக் காலை 9 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 4213 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. 97 பேர் மரணமடைந்தனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2206 ஆக உயர்ந்தது. இதுவரை 20 ஆயிரத்து 917 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. அங்கு 22 ஆயிரத்து 171 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. 832 பேர் பலியாகினர். குஜராத்தில் இதுவரை 8194 பேருக்கும், தமிழகத்தில் 7204 பேருக்கும், டில்லியில் 6923 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 3614 பேருக்கும், ராஜஸ்தானில் 3814 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 3467 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படடது. (இ-7)



# மன்மோகன் சிங்கிற்காக மகிந்த பிரார்த்தனை


(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவிட்டார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் திடீர் நெஞ்சு வலியால் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டு அவருக்கு இதய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மன்மோகன் சிங் விரைவில் குணமடைய இலங்கை மக்கள் சார்பாக பிரார்த்திப்பதாக டுவிட்டரில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதிவிட்டார்.

அவர் விரைவில் முழுமையாக குணமடைந்து வீடு திரும்புவார் என்று பிரார்த்திக்கின்றேன் என்றும் மகிந்த குறிப்பிட்டார். (இ-7)



# இராசிபலன்

**12.05.2020**
**சித்திரை 29, செவ்வாய்க்கிழமை**
**பஞ்சமி முற்பகல் 10.33 மணிவரை**
**பூராடம் முற்பகல் 8.31 மணிவரை**
**சுபநேரம் 10.24-11.54 மணிவரை**
**இராகுகாலம் 2.54-4.24 மணிவரை**
**சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்**

**மேஷம்**: ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்**: உற்றார், உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மிதுனம்**: நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கடகம்**: வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், பகைவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**கன்னி**: பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**துலாம்**: நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு**: சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெற வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்**: இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**: ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி கைகூடும், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கலாம்.

**மீனம்**: முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**அறிவைப் பெருக்குபவன் துயரத்தைப் பெருக்குவான்**

## வடக்கு மக்களே!

# டெங்குத் தாக்கம் அதிகரிக்கும் அபாயம்

## சுகாதாரத் துறையினர் அறிவுறுத்து

**(யாழ்ப்பாணம்)**

**வடமாகாணத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிக்கக் கூடிய சூழ்நிலை நிலவுவதால் பொதுமக்கள் தங்கள் வாழ்விடங்களை சுத்தமாகவும் நுளம்பு பெருக ஏதுவான இடங்களை தூய்மைப்படுத்துமாறும் சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தினர்.**

வடமாகாணத்தில் கடந்த சில நாட்களில் ஏற்பட்ட மழையுடான காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவல் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசத்தவர்கள் அதிக கவனம் எடுக்க வேண்டும். பொதுமக்கள் தமது வீட்டையும் வீட்டுச் சூழலையும் வீதியோரங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்திற்கான தடுப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர், பொலிஸார் ஈடுபட்டுள்ளமையால் டெங்குநோய் பரவல் அதிகரிப்பதை தடுக்கும் பொருட்டு சனசமூக நிலையங்கள், மாதர் சங்க அமைப்புக்கள், அபிவிருத்திச்சங்கங்கள் போன்ற சமூக அமைப்புக்கள் முன்னின்று செயற்படுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்தனர். (இ-8)

# முதலாம் ஆண்டு நினைவுகள்



திருமதி
**சகுந்தலாதேவி தவராஜா**

பிறப்பு
15.09.1940

இறப்பு
25.04.2019

திதி: சஷ்டி
12.05.2020

**விழிக்கும் இரவுகளின் கண்ணீராக வழிகின்றன—அம்மா**
**உங்கள் நினைவுகள்**
**அம்மா என்பது அன்பு, ஆதாரம், அரவணைப்பு,**
**நம்பிக்கை எல்லாமும் இழந்து தனித்தோம் நாம் இன்று**
**பூவின் மணமாக காற்றின் வருடலாக**
**எம்மைச் சூழ்ந்திருக்கின்றன உங்கள் நினைவுகள்**
**வாழ்வின் பயணம் முழுவதும் நினைவின்**
**கரம் பற்றி நடக்கிறோம் நிறைவும் நிம்மதியும்**
**இறை நிழலில் நீங்கள் பெற கரம் கூப்பித் தொழுகின்றோம்.**

(2692)

“ராஜாஸ் வாசம்”
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### நாடு முழுவதும் 5,700 பேருந்துகள் சேவையில்


(கொழும்பு)

கொழும்பு மற்றும்கம்பஹா மாவட்டங்களை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில், அரச மற்றும் தனியார்நிறுவன ஊழியர்களின் நலன் கருதி இலங்கை போக்குவரத்துசபைக்குச் சொந்தமான 5,700 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி கொரோனாவைரஸ் ஆபத்து அதிகளவில் இல்லாத 21 மாவட்டங்களில் சுமார் 3,000 பேருந்துகள்சேவையில் ஈடுபடும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்தது.

அதேநேரம் மறு அறிவித்தல் வரும் வரையில் நீண்ட தூர மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபை மேலும் சுட்டிக்காட்டியது.(இ-7)

# முன்னாள் இராஜாங்க அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள், இல்லங்கள்

## உடன் நடவடிக்கை வேண்டும்-ஜே.வி.பி.போர்க்கொடி



(கொழும்பு)

**தேர்தல்கள் விதியை மீறி, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் வீடுகளை அரசாங்கம் வழங்கியமைக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுக்காலை இது தொடர்பாக முறைப்பாடு செய்ததையடுத்து, ஊடங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு எதிராக, அரசாங்கம் அமைச்சரவைத் தீர்மானமொன்றை தற்போது எடுத்துள்ளது.


அதாவது, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களுக்கும் உத்தியோகபூர்வ வாகனங்களை வாடகை அடிப்படையில் பயன்படுத்த முடியும் என்று அரசாங்கம் தீர்மானித்தது. அமைச்சரவை என்பது, உறுப்பினர்களுக்கு வாகனங்களைப் பெற்றுக் கொடுக்கும், வாகன விற்பனை நிலையமா? என்று நாம் கேட்க விரும்புகின்றோம்.

அப்படியானால், அனைத்து உறுப்பினர்களுக்கும் வாகனங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து, மொட்டுக் கட்சியினருக்கு மட்டும் இவ்வாறான சலுகைகளை வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

இந்தச் சலுகைகள் அனைத்தும், மக்களின் வரிப்பணத்தால் ஆனவை என்பதை அரசாங்கம் மறந்து விடக்கூடாது. வாகனங்கள் மட்டுமல்லாமல், எரிபொருள், சாரதி என அனைத்தையும் முன்னாள் இராஜாங்க அமைச்சர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது. இது அப்பட்டமான தேர்தல்கள் விதிமீறலாகும். இத்தனை காலமாக மக்கள் வழங்கி வரும் அர்ப்பணிப்புக்களுக்கும் இது அவமானமாகும்.

எனவே, இதனை உடனடியாக தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நாம்கேட்டுக் கொண்டுள்ளோம்" என அவர் மேலும் கூறினார். (இ-7)

## இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் கடந்த வியாழக்கிழமை கழக மண்டபத்தில் இடம்பெற்றது. (இ-17)

## தமிழின அழிப்பை நினைவு கூருவோம்

### தமிழர் கலை, பண்பாட்டுக்கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மே-18 தமிழின அழிப்பு நினைவு கூரலை சகல கழகங்கள், அமைப்புக்கள், கலைஞர்களும் இணைய வழியாக கலைப் படைப்புக்களாகவும் நினைவுகளாகவும் வெளிக்கொணர வேண்டுமென பிரான்ஸ் தமிழர் கலை, பண்பாட்டுக்கழகம் கோரிக்கை விடுத்தது.

இது தொடர்பில் அக்கழகம் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசு சர்வதேச ஆதரவுடன் கடந்த 2009 மே-18 இல் தமிழின அழிப்பை மேற்கொண்டது. மே-18 ஒவ்வொரு தமிழரின் மனங்களிலும் மறக்க முடியாத வடுவை ஏற்படுத்திச் சென்றது. இந்த ஆண்டு உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பேரிடர் சூழ்ந்த காலமாக கடந்து கொண்டிருக்கிறது.

இப்பேரிடர் வேளையிலும் எமக்கு ஏற்பட்ட இன அழிப்பு நினைவுகளை நாம் மறந்து விட முடியாது.

மே-18 விழிப்புணர்வு நடவடிக்கையாக அனைத்து கழகங்கள், அமைப்புக்கள், கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், நினைவுகளை இணைய வழி மூலமாக வெளிக்கொணர வேண்டும்.

எமது இந்த வெளிப்பாடுகளை தமிழ் மொழியில் மட்டுமல்லாது பிற மொழிகளிலும் வெளிக்கொணர வேண்டும்.

இது எமது கடந்த கால வலிகள், வடுக்களை மற்ற சமூகத்தினர் புரிந்து கொள்ள ஏதுவாக அமையும் என அக்கழகம் மேலும் தெரிவித்தது. (இ-8)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது. எனவே உடனடியாக இந்த கட்டாக்காலி நாய்களை வைத்தியசாலை வளாகத்திலிருந்து அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-60)

## முகக் கவசம் அணியவில்லை

## வயோதிபரை தேங்காயால் தாக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைதானார்

(களுத்துறை)

கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், வயோதிபர் ஒருவரை தேங்காயால் துரத்தித் துரத்தி அடித்த சம்பவமொன்று இடம்பெற்றது.

களுத்துறை வடக்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தையடுத்து, பாதிக்கப்பட்ட 78 வயது வயோதிபர் உட்பட இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நகருக்கு வந்திருந்த இவ்விருவரும் முகக் கவசங்களை அணியாமையால் அவர்கள் வாங்கி வந்த தேங்காயால், அவ்விருவரையும் துரத்தி, துரத்தி பொலிஸார் அடித்ததாக தெரிய வருகிறது. இதனையடுத்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. (இ-7)

## சுண்ணாம்புக் கற்களை ஏற்றி வந்தவர் கைதாகி பொலிஸ் பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

ஊரடங்கு கால அனுமதிப்பத்திரம் இன்றி சுண்ணாம்புக்கற்களை ஏற்றி வந்தவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த நபர் கடந்த சனிக்கிழமை ஊரடங்கு கால அனுமதிப்பத்திரம் இன்றி தொண்டைமானாறிலிருந்து உழவியந்திரத்தில் சுண்ணாம்புக்கற்களை ஏற்றி வரும் போது வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன் பின்னர் நேற்றுக் காலை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு நாளை பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அறிவுறுத்தப்பட்டார். (இ-8-60)

## நாய் இழுத்துச்சென்ற நிலையில் சிசுவின் சடலம் மீட்பு-தாய் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் ஆணைக்கட்டு பிரதேசத்தில் தகாத முறையில் குழந்தையைப் பிரசவித்த பெண்ணொருவர், சிசு ஒன்றை வீட்டின் வளவில் கைவிட்டுச் சென்றுள்ளார்.

குறித்த சிசு நாய் இழுத்துச் சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், அந்த குழந்தையை பிரசவித்த 4 பிள்ளைகளின் தாய் ஒருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைதுசெய்ததாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தகாத உறவால் குழந்தை பிறந்ததன் காரணமாக அக்குழந்தையை கைவிட்டுவிட்டுச் செல்ல முடிவெடுத்து பிறந்த சிசுவை வீட்டின் வளவின் 300 மீற்றர் தூரப் பகுதியில் விட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையில் குழந்தையை கைவிட்ட இடத்திற்கு சென்று பார்த்தபோது குழந்தை காணாமல் போயுள்ளதாலும் சிசு பிறந்து பின் இறந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் கல்லுவாடியில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் நாய் ஒன்று இறந்த சிசு ஒன்றின் உடலை இழுத்துச் செல்வதைக் கண்டு கிராம உத்தியோகத்தருக்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த சிசுவின் தலைப் பகுதியைக் கொண்ட உடலை பொலிஸார் மீட்டதுடன் குழந்தையைப் பிரசவித்த பெண்ணைக் கைது செய்தனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மக்களால் வெறுக்கப்பட்ட பாராளுமன்றை மீண்டும் கூட்டுவதால் பயனில்லை

## பொதுஜன பெரமுன திட்டவட்டம்



(கொழும்பு)

மக்களால் வெறுக்கப்பட்ட பாராளு மன்றத்தை மீண்டும் கூட்டுவதால் எவ்வித நன்மையும் ஏற்படாது.

நெருக்கடி நிலை யிலும் எதிர்த் தரப் பினர் குறுகிய அரசியல் நோக்கங்களை கொண்டு செயற்படுவது வெறுக்கத்தக்கது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் ஒழிப்புக்கும், மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் உரிய நடவடிக்கையை முன் னெடுத்து வெற்றியடைந்துள்ளது.

கொரோனா வைரஸைக் காரணம் காட்டி கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை கூட்டுமாறு எதிர்த்தரப்பினர் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கின்றார்கள். இவர் கள் குறிப்பிடுவது பொருத்தமற்ற காரணி களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது.

மக்களால் வெறுக்கப்பட்ட பாராளு மன்றத்தைக் கூட்டுவதற்கான அவசியம் அரசியலமைப்பின் பிரகாரம் தோற்றம் பெறவில்லை. ஜனாதிபதி எக்காரணிக் காகவும் பாராளுமன்றத்தை கூட்டமாட் டார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தனியார் பேருந்து ஊழியர்கள் மீது கரிசனை காட்டுங்கள்

## பஸ் கம்பனிகளின் இணையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இக்காலப்பகுதியில் அரசால் முன்னெ டுக்கப்பட்டுள்ள நடவ டிக்கைகளால் மக்கள் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கப் பட்டுள்ளனர்.

அதற்கு எமது தனியார் போக் குவரத்துத்துறை சார்பில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

அதேவேளை யாழ்.மாவட்ட தனியார் பேருந்து சேவைகள் தொடர்பில் பின்வரும் விடயங் களை அனைவரின் கவனத்திற் கும் தெரியப்படுத்த விரும்புகின் றோம்.

01. யாழ்.மாவட்டத்திலுள்ள 600 (அறுநூறு) தனியார் பேருந்து உரிமை யாளர்கள் மற்றும் சாரதி, நடத்துநர்கள், பணியாளர்கள் எனச் சுமார் 2000 (இர ண்டாயிரம்) பேர் இக்கால கட்டத்தினுள் வருமானமின்றி உள்ள னர். அவர்களுக்கு நிவாரணம் வழங்க உதவ வேண் டும்.

02. இத்தனை நாட்களாக வருமான மின்றி உள்ள நிலையில் சேவையில் ஈடுபடும் போது எரிபொருள் மற்றும் வாகனத் தேய் மானத்தினையும் ஈடுசெய்ய முடி யாத நிலை ஏற்படுவதுடன் சாரதி, நடத்துநர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை ஏற்படும். இதனாலேயே தற்போது சேவையில் ஈடுபட முடியாதுள் ளோம்.

03. இந்நிலையில் இருக்கையில் மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல் வதனால் அரைச் சொகுசு பேருந்துகளுக்கு அற விடப்படும் கட்டணத்தை அறவிடுவதற் குரிய அனுமதியினையும் எரிபொருளை மானிய அடிப்படையிலும் வழங்கப்படும் போது எமது நிலைமையை ஓரளவு சமா ளித்துப் பயணிகளுக்குச் சேவையாற்ற உதவியாக இருக்கும்.

மேற்கூறப்பட்ட விடயங்களின் காரண மாகவே தற்போது வரை எம்மால் பய ணிகளுக்குரிய சேவையை வழங்க முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மீண்டும் நாம் பொது மக்களுக் குரிய சேவையை வழங்குவதற்காக அரசின் உதவிகளுடன் கூடிய அனுமதியை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றோம் என யாழ். பிராந்திய கூட்டி ணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார். (இ

# அமெரிக்கக் குடியுரிமையை ஏப்ரலில் கைவிட்டார் கோட்டா

## தூதரகம் உறுதிப்படுத்தல்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ 2019 ஏப்ரல் மாதத்தில் தனது அமெரிக்கக் குடியுரி மையை கைவிட்டார் என்பதை அமெரிக்கத் தூதரகம் உறுதிப்படுத்தி யது.

இந்த விடயம் குறித்து ஆங் கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த தூதரகப் பேச்சாளர், ஜனாதிபதி கோட்டா பய அமெரிக்கக் குடிமகன் அல்ல எனத் தெரிவித்தார்.

"ஏப்ரல் 2019 இல் கோட்டாபய ராஜ பக்ஷ தனது அமெரிக்கக் குடியு ரிமையை கைவிட்டார் என்பதை என்னால் உறு திப்படுத்த முடியும்.

அவர் இனி ஒரு அமெரிக்க குடிமகன் அல்ல" என தெரிவித்துள்ளார்.



அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்துகொள்வதற்கு விண்ணப்பித் தவர்க ளில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் பெயர்களை உள்ளடங்கிய முத லாவது காலாண்டுக்கான பட்டி யலை அமெரிக்கா கடந்த வாரம் வெளியிட்டது.

இதனையடுத்து ஜனாதிபதியின் இரட்டைக் குடியுரிமை நீக்கம் குறித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர் பதிவின் ஊடாக விமர்சனம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தையைத் திறக்குமாறு மக்கள் கோரிக்கை



(கரணவாய்)

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் நெல்லியடி நகரிலு ள்ள புதிய சந்தைப் பகுதியை திறக்குமாறு பொதுமக்கள் கோரி க்கை விடுத்தனர்.

ஊரடங்கு தளர் த்தப்பட்டு மக்கள் இயல்பு வாழ் க்கைக்கு திரும்பிய நிலையிலும் நெல்லியடி நகரிலுள்ள பொதுச் சந்தை திறக்கப்படவில்லை. இதனால் வியாபாரிகள் வீதி யோரங்களில் காய்கறிகள், பழங்களை வைத்து விற்பனையில் ஈடுபட்டு வருகின் றனர்.

வீதி யோரங்களில் பழங்கள், மரக் கறிகள் காணப்படுவதால் வாக னங்களில் புகை தூசுகளால் பாதிக்கப்படுகின்றன.

இதே வேளை பொதுமக்கள் வீதியோரங்களில் கூடுவதனால் சில சமயங்களில் வாகன நெரிசல்கள் ஏற்பட்டதாக வும் தெரிவிக் கப்பட்டது.

இதனால் போக்குவரத்து நடவடிக்கைக ளுக்கும் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் நெல்லியடிப் பொதுச் சந்தையைத் திறக்குமாறு கோரி க்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-8-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 4 செவ் 10 ல்
உயரம்: 176cm
தகைமை/தொழில்: B.Sc பட்டதாரி. Geolist & Managing Director, KK Ground Engineering (pvt) LTD
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10713

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 16 செவ் 9 ல்
உயரம்:176cm
தகைமை/தொழில்:B.Sc பட்டதாரி, தேசிய நீர் உயிரியல் அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட நீர் உயிரியல் விரிவாக்க அலுவலர்
எதிர்பார்ப்பு: தனியார் , அரச உத்தியோகம்.
தொ.இ: B/10714

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 30 செவ் 11 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:NVQ level-5, தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10715

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி 3கி.பா: 24¼ செவ் 1ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த, நோர்வே ல் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டில் வசிப்பவர் அல்லது வெளிநாட்டிற்கு போக விரும்பும் பெண்
தொ.இ: B/10716

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 4¾ செவ் 11 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Diploma முகாமைத்துவ உதவியாளர்.
எதிர்பார்ப்பு: படித்த நல்ல உத்தியோகம் பார்க்கும் உள்நாட்டு மணமகன். கொழும்பு விரும்பத்தக்கது
தொ.இ: G/10724

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: - செவ் 7 ல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BMS Bachelor of Manage ment , வங்கி ஊழியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன்
தொ.இ: G/10726

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: - செவ் 4 ல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BA, Relief Support Worker in Canada
எதிர்பார்ப்பு: பட்டதாரி, கனடா செல்ல வேண்டும்
தொ.இ: G/10729

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: - செவ் 12 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Hons Bussiness Management in London, Finance (UK).
எதிர்பார்ப்பு:.பட்டதாரி, பொருத்தமான மணமகன். மணமகள் விவாகரத்தானவர். எனவே பிள்ளை இல்லாத விவாகரத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/10731

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## கொரோனா கட்டுப்படுத்தப்படும் என்று பார்த்துக் கொண்டிருப்பது யதார்த்தமற்றது

# உரிய சுகாதார விதிமுறைகளின் கீழ் தேர்தலை நடத்தினால் ஒத்துழைப்பு

## பவ்ரல் சாதகமான சமிக்ஞை

(கொழும்பு)

உரிய சுகாதார விதிமுறைகளின் கீழ் பொதுத் தேர்தலை நடத்தினால் தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்தது.

கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் என்று பார்த்துக் கொண்டிருப்பது யதார்த்தமற்றது.

எனினும் சமாளிக்கக்கூடிய சூழ்நிலை வரும்போது தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் என்று பவ்ரலின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்களின்போது அனைத்துக் கட்சிகளினதும் பிரசாரக்கூட்டங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

அத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கும் கட்சிகளின் அதிகளவான பிரதிநிதிகள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டு குறைந்த எண்ணிக்கையானவர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

இதன்போது சீ.சீ.ரி.வி. கமரா கருவிகளைக் கண்காணிப்புக்களுக்காகப் பயன்படுத்த முடியும் என்றும் ரோஹண ஹெட்டியாராச்சி ஆலோசனை வழங்கினார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# கொரோனாவை கட்டுப்படுத்த புகையிரத நிலையங்களில்

## வெப்பநிலை அளவிடும் கருவி



(கொழும்பு)

பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக சுமார் இரண்டு மாதங்கள் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு நாட்டின் பல மாவட்டங்களில் நேற்றுத் தளர்த்தப்பட்டது.

இந்நிலையில் பொதுமக்கள் அதிகளவில் கூடும் புகையிரத நிலையங்களில் வெப்பநிலை அளவிடும் கருவிகள் பொருத்தப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மேலும் கோட்டை புகையிரத நிலையம் போன்ற நிலையங்களில் இந்தக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் தொற்றுள்ளவர்களை இலகுவாகக் கண்டறிய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நடைமுறையை நாடு முழுவதும் உள்ள முக்கிய புகையிரத நிலையங்களில் அமுல்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்று அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதை நிலையானதாக முன்னெடுத்துச் செல்ல அனைவரும் ஒத்துழைப்பது அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


நாடு இயல்பு நிலைக்கு மீளவும் திரும்ப ஆரம்பித்துள்ள நிலையில் அதை நிலையானதாக முன்னெடுத்துச்செல்ல அனைவரும் ஒத்துழைப்பது அவசியம் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றானது எமது மக்களை அச்சுறுத்தி வந்திருந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வழிகாட்டலிலும் சுகாதார தரப்பினர் முன்னெடுத்திருந்த சுகாதார நடைமுறைகள் காரணமாக இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் காலங்களில் இத்தொற்று எம்மை நெருங்காத வகையில் நாம் ஒவ்வொருவரும் அரசினதும் சுகாதாரத் துறையினரதும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடந்துகொண்டால் கொடிய நோயான கொரோனாவிலிருந்து நம்மையும் நமது உறவுகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதுடன் எமது நாட்டிலிருந்து குறித்த நோய்த் தொற்றை முற்றாக இல்லாதொழிக்கவும் முடியும்.

குறிப்பாக வியாபார நிலையங்கள், பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களான சந்தைகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தத்தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர். இந்த நிறுவனங்கள் அனைத்தும் சுகாதாரத் தரப்பு அறிவித்துள்ள நடைமுறைகளைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவதுடன் பொதுமக்களும் அத்தகைய கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதும் அவசியமாகும்.

ஆபத்தான கொரோனாத் தொற்றானது இதுவரை எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் நாம் அறிவோம். கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என எண்ணி அதை அலட்சியமாக எடுத்துக்கொண்டால் இனியும் எத்தகைய ஆபத்தை கொரோனா ஏற்படுத்தவல்லது என்பதையும் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



அந்தவகையில் "சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பதுடன் நாம் அனைவரும் சமூகப் பொறுப்போடு அரசினதும் மருத்துவர்களதும் ஆலோசனைகளுக்கு ஒத்துழைத்து நடப்பது அவசியமாகும்.

மேலும் நாடு முடக்க நிலையிலிருந்து திறக்கப்படுகின்றது என்ற எண்ணத்துடன் எவரும் செயற்படாது சமூக இடைவெளியைக் பேணுவதுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது, முகக்கவசங்களை அணிவது உள்ளிட்ட சுகாதாரத்துறை அறிவித்துள்ள நடைமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிப்பதனூடாக நாம் இந்தக் கொரோனா அச்சுறுத்தலிலிருந்து முற்றாக விடுபட முடியும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொவிட் - 19 நிதியத்திற்காக பிடித்தம் செய்த ஒரு நாள் சம்பளத்தை மீளக்கோரும் தபால் ஊழியர்கள்

(கொழும்பு)

கொவிட்-19 நிதியத்திற்கு எனத் தெரிவித்து, பிடித்தம் செய்த, தமது ஏப்ரல் மாதச் சம்பளத்தின் ஒரு நாள் சம்பளத்தை மீள வழங்குமாறு, இலங்கை தபால் சேவை ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்தது.

இது தொடர்பில், தபால் அமைச்சின் செயலாளருக்குக் கடிதமொன்றை எழுதிய அச்சங்கத்தின் செயலாளர் டி.எம்.விஜேரத்ன மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

கொவிட்-19 தொற்றுநோய் இலங்கையில் பரவி வரும் நிலையில், இக்கொடிய தொற்று நோயிலிருந்து தப்பிக்க மக்கள் அனைவரும் முயற்சி செய்கிறார்கள். இந்த வைரஸ் இலங்கைக்கு வருவதற்கு முன்பு, அது வருமான வழிகள், பயணங்கள் மேற்கொள்வது, சமூக தொடர்புகள் ஆகியவற்றை முற்றிலும் மாற்றியமைத்தது. தபால் ஊழியர்களும் இதில் விதிவிலக்கல்ல.

சமூகத்திலுள்ள ஏனையவர்களைப் போன்று, தபால் ஊழியர்களுக்கும் வருமான வழிகள் இல்லாமலானது. வருமானத்தை இழந்து, பொருட் கொள்வனவு உட்பட சமூக வாழ்க்கையை இழந்த அந்த ஊழியர்களுக்கு, அத்தியாவசிய சேவைகளையும் வழங்க வேண்டியிருந்தது. அவ்வாறான ஊழியர்களின், ஏப்ரல் மாதத்தின் ஒரு நாள் சம்பளத்தை கொவிட்-19 நிதியம் எனக் கூறி பிடித்தம் செய்யப்பட்டது.

இந்தப் பணத்தை இவ்வாறு வழங்க தபால் ஊழியர்கள் தங்களது விருப்பத்தை தெரிவிக்கவில்லை.

இது பொதுவான, அரசாங்கத்தின் முடிவுக்கு (சுற்றறிக்கை / வர்த்தமானி) அமைவான ஊதியக் குறைப்பு அல்ல.

தபால்மா அதிபரால் தன்னிச்சையாகப் பிடித்தம்செய்யப்பட்ட ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# அரசியலமைப்பை மீறி அரசு செயற்படக்கூடாது

## சஜித் அணி இடித்துரைப்பு



(கொழும்பு)

உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ளமையால் அந்தச் சலுகையையாவது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்த புத்தளம் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர, ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பைப் பாதிக்கும் வகையில் செயற்படக் கூடாது என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா தொற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்திருக்கும் நிலையில் அதனால் வழங்கக்கூடிய சலுகையையாவது அரசாங்கம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். புத்தளம் மாவட்டத்தில் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் குறைந்தது மண்ணெண்ணெயையாவது சலுகையாக இவர்களுக்குப் பெற்றுக்கொடுத்து உதவ வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் அரசியலமைப்புக்கு புறம்பாக செயற்பட்டு வருகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு 5 வருட ஆட்சியை நடத்த மக்கள் அனுமதித்திருந்த போதிலும் இவர்கள் பெரும் இடையூறுகளைச் செய்து வந்தனர். அதனால், அரசியலமைப்பையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பது அரசியல் வாதிகள் மாத்திரமல்ல நாட்டு மக்களின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச கண்காணிப்பாளர்களின்றி தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சி

## திஸ்ஸ அத்தநாயக்க எதிர்ப்பு



(கொழும்பு)

சர்வதேச கண்காணிப்பாளர்கள் இன்றி தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிப்பது ஜனநாயக விரோதச் செயலாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இன்று சர்வதேசமே கொரோனா என்ற கொடிய நோயின் போர்வைக்குள் மூடிக்கிடக்கின்றது. சர்வதேச விமான சேவைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் அரசாங்கம் அவசர அவசரமாக பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதியை குறித்துள்ளமை சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

பொதுத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சர்வதேச கண்காணிப்புக் குழுவினரோ, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்காணிப்புக்குழுவினரோ இங்கு வருவதற்கான சூழ்நிலை இல்லை.

முழு உலகமுமே இன்று கொரோனாப் பீதியில் இருக்கின்றது. இந்நிலையில் தேர்தல் அவசியமா? என்ற கேள்வி எழுந்திருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பிள்ளையான் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்திரகாந்தன் மீதான வழக்கை நேற்று மட்டக்களப்பு குடியியல் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை 27 ஆம் திகதிக்கு மீள எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டு ஒத்தி வைத்தார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பித்தக்கது. (இ-7)

# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2033 facebook

**சுரேஸ்**

கொரோனா கம்மியா இருக்கும் போது வீட்லயே இருங்கடானு சொல்லிட்டு



கொரோனா அதிகமா இருக்கும் போது வெளிய போக சொல்லுறாங்களே

**தர்மினி**

ஒரு 4 இட்லி தான்டா கூட கேட்டன்அவ என்ன கோவத்துல இருந்தாளோ தெரியல



பொசுக்குன்னு 40 பாத்திரத்தை எடுத்து கழுவ சொல்லிட்டா

**ராஜீ**

ரெண்டு நாளா பயங்கரமான கனவுல்லாம் வருது தூங்கக் கூட முடியல எது கொரோனா வாற மாதிரியா



அது கூட பரவாயில்லடா ஊரடங்கு முடிஞ்சு வேலைக்கு போற மாதிரியல்லா வருது

**ரீபிகா**



விடுமுறை மற்றும் விளம்பரம் இல்லாத ஒரே தொழில் விவசாயம் மட்டும் தான்

**தீபன்**

ஊரடங்கு முடிந்த பின் ஆபிஸில் : ஐயோ நான் வச்சிட்டு போன பைல் ஒண்ணையும் காணலையே



மூதேவி உன்னோட ஆபிஸ் அடுத்த தெருவுல இருக்கு

**ஜனனி**

சார் ஒருகோடி ரூபா லோன் வேணும்னு கேக்குறிங்களே எந்த ஸ்கீம்ல வேணும்



புதுசா ஏதோ தள்ளி வைப்பு ஸ்கீம்னு ஒன்னு வந்திருக்காமே அதுல கொடுங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சட்டவிரோத மீன் பிடியை இல்லாதொழியுங்கள்

## வீதியிலிறங்கிப் போராட நேரிடும்

### மீனவ அமைப்புக்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலான ஊடக சந்திப்பு ஒன்று முல்லைத்தீவு மீனவர் சம்மேளனம் மற்றும் கிராமிய கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நாயாற்றுப் பகுதியிலுள்ள மீனவர் ஓய்வு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட மீனவ அமைப்புக்களின் தலைவர் நோ.யூட்நிக்ஸன், நாயாறு கிராமிய கடற்றொழில் அமைப்பின் தலைவர் கணேசமூர்த்தி மற்றும் நாயாறு மீனவ சங்கத்தின் உறுப்பினர் கமலேஸ்குமார் ஆகியோர் இணைந்து மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர். அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட மீனவ அமைப்புக்களின் தலைவர் நோ.யூட்நிக்ஸன் கருத்துத் தெரிவிக்கும் போது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு, கொக்கிளாய், புல்மேட்டை ஆகிய கடற்பரப்பில் ஒளி பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத மீன் பிடித்தல் நடவடிக்கையினை கொக்கிளாய், புல்மோட்டை பகுதிகளில் இருந்து மீனவர்கள் மேற்கொள்வதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அன்றாட ஜீவனோபாயத்தை மேற்கொள்ளும் 2ஆயிரத் திற்கும் மேற்பட்ட படகுகளை கொண்ட ஐந்தாயிரம் வரையிலான குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையினால் கடலில் உள்ள சிறு வகை மீன்கள் அழிவடைந்து செல்கின்றன. ஒரு சில முதலாளிமார்கள் தங்கள் சுயலாபத்திற்காக இவ்வாறான சட்டவிரோத தொழில் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை தொடர்பில் அரசாங்க அதிபர், கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களம், கடற்றொழில் அமைச்சு அனைவருக்கும் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே இதனைக் கருத்திற் கொண்டு சுருக்குவலை, ஒளி பாய்ச்சி மீன் பிடித்தல் மற்றும் தென்னிலங்கையில் இருந்து வரும் அட்டைத் தொழிலாளர்கள் தற்போது தொழிலை தொடங்குவதற்காக முயற்சி செய்துள்ளார்கள். அவர்களை முற்றுமுழுதாக தடுத்து நிறுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் மீன் வளம் பெருகிக் காணப்படும் மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்பட்டது. ஆனால் கடந்து வந்த அரசாங்கத்தின் காலத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையினை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் மாவட்ட கடற்றொழில் சம்மேளனம் என்ற வகையில் கடற்றொழில் அமைப்புக்கள், கிராமிய கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பாரிய ஆர்ப்பாட்டம் அல்லது அதற்குரிய மாற்று வழிகளை செய்வோம் என்று தெரிவித்தனர். (ஜ-4-281)

# வவுனியாவில் ஊரடங்கு தளர்வு; மக்கள் நடமாட்டம் குறைவு





(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு இயல்பு நிலைக்கு வந்த போதும் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டதுடன், வடமாகாணத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துக்களும் இடம் பெற்றன.

கொவிட் - 19 காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு சட்டமானது நேற்றுக் காலை 5 மணிக்கு நீக்கப்பட்டு 23 மாவட்டங்களில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டது.

இதற்கமைவாக வவுனியாவில் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள் என்பன திறக்கப்பட்டு இயங்கியதுடன், முச்சக்கர வண்டி, பேருந்துப் போக்குவரத்துக்களும் இடம் பெற்றன.

வவுனியாவில் இருந்து வட மாகாணத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கிடையில் இ.போ.சபை பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன.

இதன்போது அரச, தனி யார் உத்தியோகத்தர்கள் மற்றும் பாஸ் உள்ளோர் மட்டுமே பயணிக்க அனுமதிக்கப்பட்டதுடன் பேருந்துகளில் மட்டுப்படுத்தப்பட்ட பயணிகளுடன் சுகாதார நடைமுறைகள் பின்பற்றியே சேவைகள் இடம்பெற்றன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம், பூவரசங்குளம், நெடுங்கேணி உள்ளிட்ட உள்ளூர் சேவைகளும் இடம் பெற்றன. இயல்பு நிலை ஏற்பட்ட போதும் நகரப்பகுதியில் மக்களது நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

இதேவேளை, சிகையலங்கார நிலையங்கள், மதுபானசாலைகள் என்பன மூடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-250)



(படம்-தருமபுரம் செய்தியாளர் )

தருமபுரம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் பாவேந்திரன் பவித்திரன் அண்மையில் வெளியாகிய க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை யில் 8ஏபி தரத்தை பெற்று சித்தியடைந்தார். பெண் தலைமைத்துவ குடும்பத்தில் வாழ்ந்து வரும் குறித்த மாணவன் பிறவியிலேயே சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று சாதனை படைத்துள்ளார். இவருக்கென இருந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ள நிலையில் புதிய இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் தாக்குதலிற்கு இலக்கானவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் கடந்த ஆறாம் திகதி பொலிஸாரினால் மூன்று நபர்கள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

காரணங்கள் எதுவுமின்றி மூன்று நபர்கள் கடந்த ஆறாம் திகதி இரவு அவர்களின் வீடுகளில் புகுந்த பொலிஸாரினால் தாக்கப்பட்டு இருந்தார்கள். இது தொடர்பில் பொலிஸார் முறைப்பாடுகளையும் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்ட தரப்புகள் தெரிவித்ததோடு தங்கள் மீதான தாக்குதல் செயற்பாடுகளுக்கு உரிய நீதியைப் பெற்றுத் தருமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கின்ற நிலைமையில் குறித்த விடயம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணி வசந்தராஜாவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயத்திற்கு முறைப்பாடு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. (ஜ-4-281)

# எதிர்வரும் காலங்களில் வாய்க்கால் அமைப்புகளுக்கு விவசாயம் செய்ய அனுமதி இல்லை

## மன்னார் அரச அதிபர் திட்டவட்டம்



(மன்னார்)

இனிவரும் காலங்களில் வாய்க்கால் அமைப்புகளுக்கும் வேறு அமைப்புகளுக்கும் விவசாயம் செய்ய அனுமதி வழங்குவது இல்லை என்றும் சிறுபோக பயிர்ச் செய்கையின் போது நீரின் அளவை அடிப்படையாகக் கொண்டு கட்டுக்கரைக் குளத்தின் கீழ் காணி உள்ள விவசாயிகளுக்கு ஈவு முறையில் பகிர்ந்து அழிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார். மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளுவது தொடர்பான கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் 10 வாய்க்கால் அமைப்புக்களின் பிரதித் தலைவர்கள், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்பத்தில் கூட்டத்தில் அரை ஏக்கர் படி திட்டத்தை நடை முறைப்படுத்த தீர்மானிக்கப் பட்டிருந்தது. சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அரை ஏக்கர் வீதம் ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்து வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது இடம் பெற்ற கூட்டத்தில் வருகை தந்திருந்த விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும் வழமையான நடைமுறைகளுக்கு அமைவாகவும் குறிப்பாக கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வரும் முறையாக நீர்வரத்து அதிக அளவில் இருப்பதனால் கட்டுக்கரை குளத்தின் கீழ் காணி உள்ளவர்களுக்கு ஈவுஅடிப்படையில் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இனிவரும் காலங்களில் வாய்க்கால் அமைப்புகளுக்கும் வேறு அமைப்புகளுக்கும் விவசாயம் செய்ய அனுமதி வழங்குவது இல்லை என்றும் சிறு போக பயிர்ச் செய்கையின் போது நீரின் அளவை அடிப்படையாகக் கொண்டு கட்டுக்கரை குளத்தின் கீழ் காணி உள்ள விவசாயிகளுக்கு ஈவு முறையில் பகிர்ந்து அழிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைகள் தொடர்ந்தும் இடம் பெறக்கூடாது என இக் கூட்டத்தில் வலியுறுத்தி உள்ளோம். சில சந்தர்ப்பங்களில் ஏழை விவசாயிகளுக்கு எதுவும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில் சரியான முறையில் ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். புலவுக்குள் நெல் விதைப்பு செய்வது ஒரு தவறான செயற்பாடு என்று வலியுறுத்திக் கூறியுள்ளேன். அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன். விதைப்பு ஆரம்பிக்கும் திகதியாக எதிர்வரும் 21 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன பொறியியலாளரும், திட்ட முகாமையாளரும், கமநல சேவை உதவி ஆணையாளரும் இணைந்து காணிப் பங்கீடுகளை மேற்கொள்வார்கள் என்றும் இறுதிப்பட்டியல் எதிர்வரும் 21 ஆம் திகதி வெளியிடப் பட்டதன் பின் வயல் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-285)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்



15

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட மாகாண சபை சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டு தற்போது 30 வருடங்களுக்கும் மேலாகிறது. ஆனால் மாகாண சபை முறைமையில் வெற்றி, தோல்வி முறைப்பாடுகளோ, அவற்றை வலுவூட்டும் முறைமை தொடர்பிலோ 30 வருட காலமாக எந்தவொரு அரசாங்கமும் மீளாய்வு செய்யவில்லை.

அதனால் மாகாண சபைகளில் நாங்கள் எதிர்பார்த்த நோக்கங்கள் வெற்றியடைந்துள்ளதா? தோல்வியடைந்துள்ளதா? என்பதை கணக்கிட்டுக் கூற முடியாது. இன்று மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியானது 85 சதவீதம் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் 15 சதவீதம் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்படுகிறது. மாகாண சபைகளை கலைத்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் பல்லாயிரக்கணக்கான மாகாண சபை அதிகாரிகள் பொறுப்புகளோ வேலைகளோ இன்றி உள்ளனர். மாகாண சபை முறைமை தொடர்பில நாம் எமது கடமையை சரிவர நிறைவேற்றவில்லை. மீளாய்வு செய்து அது தொடர்பில் கண்டறிந்து மாகாண சபைகளை வலுவூட்டுவதற்கும் அதை சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்கும் முடியாமல் போயுள்ளது.

நான் இங்கு கருத்துத் தெரிவிப்பது சபாநாயகர் ஆகிய உங்களுக்கோ பிரதமருக்கோ இந்த சபையில் என்னை விமர்சிக்கின்றவர்களுக்கோ எதிராக அல்ல. நாம் ஏதாவது தவறு செய்கிறோம் என்றால் அதனை திருத்திக்கொள்ள வேண்டும். நாங்கள் வாகனத்தை செலுத்தும் போது வாகனம் சாலையை விட்டு விலகி தவறான வழியில் சென்றால் அது மின் கம்பத்தில் மோதுவதற்கு முன்னரே நாம் வாகனத்தை மீண்டும் சாலைக்குக் கொண்டு வர முயற்சிப்போம்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக நான் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் பலர் தவறான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். நான் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எதிராக பேசவில்லை. அரசியலமைப்பு சபையின் காலவரையறை போன்று சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் காலவரையறை உண்டா? அது தொடர்பிலான விடயங்கள் என்ன? கொள்கைகள் என்ன? வழிகாட்டல்கள் என்ன? என்பதையே நான் கேட்டேன்.

அவ்வகையான எந்த விடயமும் சுயாதீன ஆணைக் குழுக்களிடம் இல்லை. நான் அன்று கூறியதையே இன்றும் கூறுகிறேன். மோசமான குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தற்காரர்கள், பாதாள உலக கோஷ்டிகளின் தலைவர்கள் போன்றவர்களை வெலிக்கடை சிறைச்சாலையில் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் நீதியரசருடன் கலந்துரையாடி எடுக்கப்பட்ட முடிவுக்கமைய அவர்களை அக்குனுகொல பெலெஸ்ஸ சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றோம். அதன் பின்னர் போதைப்பொருள் கடத்தற்காரர்கள், பாரிய குற்றவாளிகள், பாதாள உலக கோஷ்டியினர், மனித உரிமை ஆணைக்குழு போன்ற தரப்புகளிடமிருந்து அதிரடிப்படை தலைவரிடம் பல கேள்விகள் கேட்டு பக்கம் பக்கமாக கடிதங்கள் அனுப்பி வருகின்றனர்.

அக்குனு கொலபெலெஸ்ஸ மாற்றுவதற்கு அனுமதியளித்தது யார்? குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்க கூறியது யார்? யாரின் பணிப்புரைகளுக்கமைய நீங்கள் அங்கு சென்றீர்கள்? நீங்கள் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறீர்கள்? அந்த நடவடிக்கைகளுக்கான பொறுப்புகளை நீங்கள் ஏற்பீர்களா? ஆகிய கேள்விகளை அதிரடிப்படை தலைவரிடம் கேட்டு வருகின்றனர்.

மனித உரிமை ஆணைக்குழு, அமைச்சர் மங்கள சமரவீர போன்றவர்கள் பாதாள உலக கோஷ்டியினர், குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தற்காரர்கள் ஆகியவர்களின் மனித உரிமைகளுக்காக முன்வருகிறீர்களா? நான் உரையாற்றியதன் பின்னர் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதை நான் கண்டேன். ஜனாதிபதி இவ்வாறான கருத்தொன்றை தெரிவித்திருக்கின்றார். எங்களுக்கு வேலை செய்வதற்கு மனமில்லை. பணியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டு செல்வதற்கு தோன்றுகின்றது எனத் தெரிவித்திருந்தார்.

நான் அவரிடம் என்ன கேட்கிறேன் என்றால் மனித உரிமை ஆணைக்குழு 21 மில்லியன் நாட்டு மக்களின் உரிமை களை பாதுகாக்கின்றதா? குற்றவாளிகளினதும் பாதாள உலக கோஷ்டிகளினதும் மனித உரிமைகளை பாது காக்கின்றதா? மனித உரிமை தொடர்பில் பெருமை பேசும் உலகின் பெரிய நாடுகளின் தலைவர்கள் தீவிரவாதிகளையோ போதைப்பொருள் கடத்தற்காரர்களையோ பாதாள உலக கோஷ்டியினரையோ கைது செய்ததன் பின்னர் மனித உரிமைகளுக்கு அனுகூலமாகவா செயற்படுகிறார்கள். அனைத்து மனித உரிமைகளையும் எம்மிடம் தான் திணிக்கிறார்கள்.

நீதிபதிகளை நியமிப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி அமைச்சர் ஒருவரும் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் என்னை கடுமையாக விமர்சித்திருந்தனர்.

நான் நீதிபதிகளை நியமிப்பது தொடர்பில் குறை கூறியுள்ளேன் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் நான் முன்பும் தெரிவித்தேன். நான் கூறியது நியமிக்கப்பட்டவர்களையல்ல. எனது கேள்வி அரசியலமைப்பு நிராகரிக்கும் சிபாரிசுகளுக்கு என்ன நடக்கும்? அதற்கு பொறுப்புக் கூறுகின்றவர் யார் என்பதே ஆகும். அச்சபையினால் இதுவரை 14 நீதியரசர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் சிலரின் பெயர்களை நான் மூன்று முறை அரசியலமைப்பு சபைக்கு அனுப்பி வைத்திருக்கின்றேன். எதனால் அவர்கள் அப்படி அனுப்பி வைக்கின்றார்கள். காரணம் நீதியரசர்களால் அரசியல் யாப்பு சபைக்கு முன்னாள் ஆஜராக முடியாது. அவர்களால் பிரதம நீதியரசரை சந்திக்கவும் முடியாது. ஆகையால் அவர்களால் இலகுவாக பிடித்துக் கொள்ளக்கூடியவன் நான் ஒருவன் மாத்திரமே.

என்னை வீதியில் வைத்தாவது பிடித்துக்கொள்ள முடியும். அதனாலேயே அவர்கள் குறை கூறக்கூடிய இடத்தை நாடி வந்திருக்கின்றார்கள். அவர் களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள். நீங்களே எம்மை கவனத்தில் கொள்ள வில்லை என அவர்கள் கூறுகின்றார்கள்.

அதாவது நானே அவர்களை வெட்டுகின்றேன் என்ற எண்ணம் முதலில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்போது அவர்களுக்கு அந்த எண்ணம் இல்லை. ஆகையால் மிகத் தெளிவாகவே நீதியரசர்களின் பெயர் அரசியலமைப்பு சபையினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அப்பதவியை வகிப்பவருக்கு தமது சேவைக்காலத்திற்கான பதவி உயர்வு தமக்கு அரசியலமைப்பு சபையினாலோ வேறொரு நிறுவனத்தினாலோ எதனால் சிபாரிசு செய்யவில்லை என்ற காரணத்தை அறிந்து கொள்வதற்கான உரிமை இருக்கின்றது.

சாதாரண ஒரு தொழிலாளியை எடுத்துக் கொண்டாலும் கூட அவருக்கு தகைமை இருந்தும் பதவி உயர்வு கிடைக்காவிட்டால் எதனால் அப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனக் கேட்கும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. அப்படி பார்க்கும் பொழுது நீதியரசர் என்பவர் ஒரு சாதாரண ஆள் அல்ல. இவ்விடயத்தில் நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய அனைத்து நீதிமன்றங்களிலும் கடமையாற்றும் மதிப்பிற்குரிய நீதிபதிகளின் எதிர்பார்ப்புகள் இன்று சிதைந்து போயிருக்கின்றன. ஆகையால் அவர்கள் எமக்கும் இதே கதி நேருமா எனக் கேட்கின்றார்கள்.

எமக்கும் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எவரின் பின்னாலாவது செல்ல நேரிடுமா? நாங்கள் கீழ் மட்டத்திலிருந்து நீதவான் நீதிமன்றிலிருந்து எமது பதவி உயர்வுகளுடன் எதிர்காலம் பற்றிய ஒரு எதிர்பார்ப்புடனேயே முன்னகர்ந்து செல்கின்றோம். அதற்காக நாம் பெரும் பாடுபட்டு உழைக்கின்றோம். ஆகையால் இவ்வாறு பெயர்களை நிராகரிக்கப்படுபவர்களுக்கு அவ்வாறு அவர்கள் எதனால் நிராகரிக்கப்படுகின்றார்கள் என்ற விடயத்தை தெரிந்து கொள்வதற்கான மிகத் தெளிவான உரிமை இருக்கின்றது.

சபாநாயகரே, நான் அறிந்த வரைக்கும் நான் இப்போது கூறுவது 2015 ஏப்ரல் 27 ஆம் திகதி 19 ஆவது சீர்திருத்தம் அங்கீகரிக்கப்பட்ட போது கரு ஜெயசூரிய ஒரு அமைச்சர் என்ற வகையில் இந்த அவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை அப்போதைய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அப்போது நீங்கள் பொது நிர்வாக, உள்ளூராட்சி, ஜனநாயக நிர்வாகம் பற்றிய மற்றும் புத்தசாசன அமைச்சராக இருந்தீர்கள். 19 ஆவது சீர்திருத்தம் பற்றிய விவாதத்தில் கலந்து கொண்ட நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்கள்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின் போது மைத்திரி சிந்தனை எனும் எமது கொள்கைத் திட்டத்தினை எடுத்துக்கொண்டு சந்தி சந்தியாக சென்று நாம் மக்களிடம் வாக்கு கேட்டமை இத்தருணத்தில் எனக்கு ஞாபகம் வருகின்றது. எமக்கு நூறு நாட்களை தாருங்கள்.

அந்த நூறு நாட்களுக்குள் நீதியை மதிக்கின்ற நியாயமான ஒரு சமூகத்தை உருவாக்கி இந்த நாட்டை அரசியல் மயப்படு வதிலிருந்து மீட்டெடுப்போம் என நாம் கூறினோம். அடுத்தபடியாக அவ்விவாதத்தில் நீங்கள் அரசியல்மயமான ஒரு சமூகத்தை, அரசியல் மயமான ஒரு அரச சேவையை, அரசியல் மயமான ஒரு காவல் துறையை, அரசியல் மயமான ஒரு நீதித்துறையை தூய்மைப்படுத்த வேண்டுமாயின் எமக்கு சமூகத்தில் மதிப்பிற்குரியவர்கள் தேவைப்படுகின்றார்கள். இன்று நாம் அதையே எதிர்பார்க்கின்றோம். நாம் பொதுமக்களிடமும் அதையே கூறினோம். சபாநாயகரே, பிரதமரே, எதிர்க்கட்சி தலைவரே அப்படியான புகழ்பெற்ற நபர்கள் இவ்விடத்தில் இருப்பதே வரவேற்கத்தக்கதென நான் நினைக்கின்றேன். நாம் ஏதேனும் ஒரு வகையில் அவ்விடத்திலிருந்து புகழ் பெற்றவர்களை ஒதுக்கிவிட வேண்டும் என எதிர்பார்க் கின்றோமாயின் ஆணைக்குழுக்களில் அரசியல்வா திகளை மாத்திரம் நியமிக்க விருப்பம் கொண்டிருப்பின் சபாநாயகர் இச்சட்டமூலத்தைப் பற்றி கதைப்பதில், எவ்வித பிரயோசனமும் இல்லை. இதைக் கொண்டு வருவதில் எந்த பிரயோசனமும் இல்லை. அது அப்படி நடக்குமாயின் எமது குறிக்கோள் நிறைவேறியதாக நாம் கருதப் போவதில்லை. சபாநாயகரே நீங்களே அப்படி கூறுகின்றீர்கள். அவ்வாறு நீதித்துறையும் காவல் துறையும் அரச துறையும் சமூகமும் அரசியல் மயமானதாக அன்று நீங்கள் தெரிவித்தது போன்று அரசியலமைப்பு சபை அரசியல் மயமாகியிருப்பதாக நீதிபதிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பக்கச்சார்பற்ற நடுநிலை கொண்டவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

சபாநாயகரே! வேலியே பயிரை மேய்ந்தால் யாரிடம் முறையிடுவது என்ற கதை உள்ளது. கடந்த தினங்களில் நீதிபதிகளை நியமிப்பது தொடர்பில் நீங்கள் எனக்கொரு கடிதம் அனுப்பி வைத்திருந்தீர்கள். 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நீங்கள் அனுப்பிய கடிதத்தில் ஒரு நபரை தேர்ந்தெடுக்கும் போது அவரின் சேவை மூப்பை மாத்திரம் ஒருபோதும் கவனத்திற்கொள்ள மாட்டோம். சட்டம் மற்றும் நீதிமன்ற சேவையில் அவர் பெற்றிருக்கும் திறமை, நிபுணத்துவம், வினைத்திறன், சுயாதீனத்தன்மை மற்றும் நேர்மை போன்றவற்றையே நாம் கருத்திற்கொள்வோம்.

மேலும் இலஞ்சம் வாங்கி யவர்கள், திறமையற்றவர்கள், இலஞ்ச குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர்கள், சுயாதீனமாக செயற்படவில்லை என்று ஆதாரபூர்வமாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் ஆகியவர்கள் சபையினால் கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளனர். நிராகரிக்கப்பட்டவர்களை தான் நீங்கள் இங்கு குறிப்பிட்டுள்ளீர்கள். இங்கு பிரச்சினை என்று நான் கருதுவது என்னவென்றால் இது உங்களதும் எனதும் பொறுப்பு மாத்திரமல்ல, பிரதம நீதியரசின் பொறுப்பும் இதில் உள்ளடங்கியுள்ளது. நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கு பிரதம நீதியரசருக்கும் கடமை உள்ளது.

நான் அறிந்த வகையில் நீதிபதி ஒருவர் பதவி உயர்வுக்கு தகுதியானவர் இல்லையென்றால் அவர் அந்த பதவி உயர்வுக்கு தகுதியற்றவர் என்று அவருக்கே அறிவியுங் கள். ஒழுக்காற்று விசாரணையா, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பிலான பிரச்சினையா, கடமையாற்றுவதில் தவறுகளா, இல்லையென்றால் வேறேதும் விடயமா என்பதை அவருக்கு தெரிவிக்க வேண்டும். இப்போது 14 பேர் ஏன் என் பின்னால் வருகிறார்கள்? அவர்களில் அரைவாசிக்கும் மேலானவர்கள் தற்போது ஓய்வு பெற்றுள்ளார்கள்.

அவர்கள் பதவி உயர்வை பெற்றிருந்தால் 65 வயது வரை கடமையாற்றியிருக்கலாம் என்றும் 60 வயதில் அவர்களுக்கு சேவையிலிருந்து ஓய்வுபெற நேர்ந்ததாகவும் கூறுகிறார்கள். அவர்களுக்கு பதவியுயர்வு வழங்கியிருந்தால் 65 வயது வரை கடமையாற்றிருக்கலாம் என்றும் ஏன் பதவி உயர்வு வழங்கவில்லை என்றும் கேள்வி எழுப்புகிறார்கள்.

அவர்களின் பிள் ளைகள் அவர்கள் என்ன குற்றஞ் செய் தார்கள் என்று கேள்வி எழுப்புகிறார்கள். அப்படியென்றால் இது தொடர்பாக ஏன் இன்னும் பதிலளிக்கவில்லை.

அத்துடன் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி நீங்கள் அனுப்பிய கடிதத்தில் மற்றுமொரு விடயத்தை குறிப்பிட்டுள்ளீர்கள்.

தகுதியான நபர்களைத் தேர்ந் தெடுக்கும் போது நியாயமானதும் வெளிப்படையான துமான நடைமுறைகளை பின்பற்றி சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல்களின்றி முடிவுகளை எடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாகவும் அனைத்து கருத்துக்களையும் ஆராய்ந்து பக்கச்சார்பற்ற இறுதி முடிவொன்றுக்கு வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டு இருந்தீர்கள்.

(தொடரும்....)

# குண்டுத் தாக்குதலுடன் தொடர்பு மூதூர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் கைது

(மூதூர்)

உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்து இடம்பெறும் விசேட விசாரணைகளில் ஒரு அங்கமாக, திருகோணமலை - தோப்பூர் பகுதியிலுள்ள வீட்டில் வைத்து மூதூர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரை சி.ஐ.டியின் விசேட பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தின் பிரதான சந்தேக நபராக கருதப்படும் பயங்கரவாதி சஹ்ரானின் பிரதான சகாவான மொஹமட் இப்ராஹீம் சாஹித் அஹமட்டிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைய கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி சம்பூர் பொலிஸ் பிரிவில் ஆயுதப் பயிற்சி முகாம் கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அது குறித்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில், ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதாக நம்பப்படும் மற்றொரு இடம் நேற்று முன்தினம் தோப்பூர் பகுதியில் கண்டறியப்பட்ட நிலையிலேயே, அந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் மூதூர் பிரதேச சபையின் தவிசாளரான 55 வயதுடைய ஹாஜா மொஹிதீனை கைது செய்ததாக நான்காம் மாடித் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபர், கொழும்பு கோட்டையிலுள்ள சி.ஐ.டியின் தலைமையகத்துக்கு மேலதிக விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

சி.ஐ.டி.விசாரணைகளின் பிரகாரம் தோப்பூர் பகுதி ஆயுத பயிற்சி முகாமில், துப்பாக்கிகளைக் கழற்றி பூட்டுதல், சுத்திகரித்தல் உள்ளிட்ட விடயங்கள் செயன்முறை பயிற்சி ஊடாக போதிக்கப்பட்டதாகத் தெரியவந்துடன், மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தில் கைதான 5 சந்தேக நபர்களுக்கு அங்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டமையும் கண்டறியப்பட்டது.

மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தில் சி.ஐ.டியின் விசேட விசாரணைப் பிரிவு விசாரணைகளில் இதுவரை 44 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (இ-7)

# மலேசியாவில் சிக்கித் தவித்த 178 மாணவர்கள் நாடு திரும்பினர்



(கொழும்பு)

கொரோனா பரவல் காரணமாக மலேசியாவில் சிக்கித் தவித்த 178 இலங்கை மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் - 315 என்ற சிறப்பு விமானத்தின் மூலமாக இவர்கள் மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தை நேற்று முன்தினம் மாலை 4.12 மணியளவில் வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்ததும் மாணவர்கள் அவர்களது பொதிகள் கிருமி நீக்கல் நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் விமான நிலையத்திலிருந்து அவர்களை இலங்கை இராணுவத்தினர் பேருந்துகள் மூலமாக தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (இ-7)

# புகையிரதத்தில் பயணம் செய்ய இதுவரை 2800 விண்ணப்பங்கள்

(கொழும்பு)

புகையிரதத்தில் பயணம் செய்வதற்காக அரச மற்றும் தனியார் துறை ஊடாக இதுவரையில் 2800 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் தெரிவிக்கையில்,

இதற்கமைய ஒவ்வொரு நாளும் 5 நிறங்களை அடிப்படையாகக் கொண்ட அட்டை வழங்கப்படும். இதனைப் பயணிகள் பயணச்சீட்டாகப் பயன்படுத்த முடியும்.

வழங்கப்படும் பயண அட்டை ஒரு வாரத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஒரு கிழமைக்குப் பின்னர் நிறுவனம் ஊடாக மீண்டும் பதிவு செய்ய வேண்டும்.

புகையிரத சேவையைப் பயன்படுத்த பதிவு செய்யாதவர்கள் புகையிரத நிலையங்களுக்குள் உட்பிரவேசிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் பயணிகள் கட்டாயம் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிமித்தம் அனைத்துப் புகையிரத நிலையங்களிலும் 600 இராணுவத்தினர் சேவையில் ஈடுப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தென்னையில் ஏறியவர் தவறி விழுந்து மரணம்

(ஏறாவூர்)

தேங்காய் பறிப்பதற்காக உயரமான தென்னை மரத்தில் ஏறியவர் பிடி சறுக்கியதால் தவறி விழுந்து மரணமடைந்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஏறாவூர் சதாம்ஹுசைன் கிராமத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது அப்பகுதியைச் சேர்ந்த ஆதம் லெப்பை லாபீர் (வயது-40) என்பவரே பரிதாபமாக பலியானார்.

இவர் கூலிக்கு தேங்காய் பறிப்பதற்காக உயரமான தென்னை மரத்தில் ஏறியபோது மர உச்சியிலிருந்து பிடி சறுக்கி கீழே விழுந்து உயிரிழந்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மானுட ஆசைகள்

ஒரு ராஜா ஊரெல்லாம் சுற்றிப்பார்த்திட்டு வரலாம் என்று ஒருநாள் புறப்பட்டுப் போனார். ஒரு இடத்திலே தறி நெசவு வேலை ரொம்ப மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

ஒரு பெரியவர் தறியாலே நெசவு வேலை செய்து கொண்டிருந்தார். பக்கத்திலே ஒரு அழகான பெண் உட்கார்ந்து நூலை சுற்றிக்கொண்டிருந்தாள். ராஜா அந்தப் பெரியவரைப் பார்த்து யாரு இந்தப் பெண்? என்று விசாரித்தார். ராஜா இப்படிக் கேட்டதும் அவருக்கு ரொம்பப் பெருமையாகப் போய்விட்டது. ஏனென்றால் உட்கார்ந்திருந்தது அவருடைய மகள்.

“அரசே இது என் மகள்! இவள் வேகமாக நூல் திரிக்கக் கூடியவள். வைக்கோலை எடுத்து இவள் திரிச்சால் கூட அது எல்லாம் பவுண் இழையா வெளிவரும். அப்படி ஒரு ராசி இவளுக்கு” என்று ரொம்பப் பெருமையா ராஜாவிடம் சொன்னார் அவர்.

ராஜா இதைக் கேட்டதும் அசந்துவிட்டார். “அப்படியா? இவ்வளவு அழகும் சாமர்த்தியமும் உள்ள இந்தப் பெண் என்னோட வரட்டும். இவளை என் மருமகளாக ஆக்கிக் கொள்ள விரும்புகிறேன்” என்றார் ராஜா.

அந்தப் பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ கொஞ்சம் பெருமையாக சொல்லப் போக அது இப்படி ஆகிவிட்டதே என்று கவலைப்பட்டார். இருந்தாலும் ராஜா பேச்சை தட்ட முடியுமா? மகளை அனுப்பி வைத்தார். ராஜா அந்தப் பெண்ணை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அங்கே ஒரு அறையிலே வைத்துப் பூட்டினார். அந்த றூம் நிறைய வைக்கோலை கொண்டு வந்து போட்டு அடைத்தாங்க. மூன்று ராட்டைகள் வேறு வைத்திருந்தாங்க.

“நாளைக்கு பொழுது விடியிறதுக்குள்ளே நீ இந்த வைக்கோலையெல்லாம் தங்க இழையா நூற்றுக்காட்டணும். நாளைக் காலையிலே வந்து நான் இந்த அறைக் கதவைத் திறப்பேன். உன் தகப்பன் சொன்னது மாதிரி எல்லாம் தங்கமாக மாறி இருக்க வேண்டும். இல்லையென்றால் நீ உயிர் தப்ப முடியாது” என்று உத்தரவு போட்டுவிட்டு போய்விட்டார் ராஜா.

பாவம் அந்தப் பெண். பகல்முழுவதும் அழுது கொண்டேயிருந்தாள். இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. மறுநாள் அதிகாலை நேரத்தில் யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது. பயந்து கொண்டே கதவைத் திறந்தாள். திறந்து பார்த்தால் வெளியிலே மூன்று அவலட்சணமான பெண்கள். ஒருவருக்கு கால் அகலமாக முறம் மாதிரி இருந்தது. இன்னொருவருக்குக் கட்டைவிரல் கரண்டி மாதிரி பெரிசா இருந்தது. மூன்றாவது பெண்ணுக்கு உதடு தடித்து ரப்பர் மாதிரி தொங்கிக் கொண்டிருந்தது.

“யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேணும்? என்று கேட்டாள் இந்தப் பெண். நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கோம்” என்று சொல்லி உள்ளே வந்து உட்கார்ந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குள்ளே உள்ளே இருந்த வைக்கோலையெல்லாம் தங்க இழையாக மாற்றிக் கொடுத்திட்டுப் போய்விட்டார்கள்.

காலையிலே ராஜா வந்து பார்த்தார். பிரமாதம் என்றார். இன்னும் கொஞ்சம் வைக்கோலைக் கொண்டு வந்து அந்த றூமிலே போடச் சொன்னார். “இந்த வைக்கோலையும் இன்றைக்கு தங்கமாக மாற்று. நாளை மறுநாள் உனக்கும் இளவரசனுக்கும் கல்யாணம்” என்று சொன்னார். இன்றும் அந்த மூன்று பெண்களும் வந்தார்கள்.

வைக்கோலை பொன் இழைகளாக மாற்றினார்கள். இந்தப் பெண் அவர்கள் காலிலே விழுந்து வணங்கினாள். “என் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்” என்றாள்.

“பயப்படாதே! நீ விரும்பினால் எங்களுக்கு ஒரு உதவி செய்யலாம். உன்னுடைய கல்யாணத்துக்கு நாங்கள் மூன்று பேரும் வருகிறோம். நீ எங்களை வரவேற்று ராஜாவிடமும் இளவரசரிடமும் நாங்கள் உன்னுடைய பெரியம்மா பிள்ளைகள் என்று சொல்லி அறிமுகப்படுத்திவை. நாங்கள் விருந்து சாப்பிட்டுப் போகிறோம்” என்றார்கள்.

ரொம்பவும் சந்தோசமாக சரி என்று ஒத்துக்கொண்டாள். கல்யாண நாள் வந்தது. கல்யாணம் ரொம்ப கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. எல்லா தேசத்து ராஜா, ராணிகளும் வந்திருந்தார்கள். அந்த மூன்று அவலட்சணமான பெண்களும் வந்து சேர்ந்தார்கள்.

யார் இவர்கள் என்று கேட்டார் ராஜா. என் பெரியம்மா பிள்ளைகள் என்று சொன்னாள் அவள். காலும் உதடும் கட்டை விரலும் ஏன் உங்களுக்கு இப்படி அவலட்சணமாக ஆகிவிட்டது என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்கள் பதில் சொன்னார்கள்.

என்ன செய்யிறது ஓயாமல் வைக்கோலை நூற்று ஒருத்தியோட கட்டை விரல் கரண்டி மாதிரி ஆகிவிட்டது. நாக்கிலே தொட்டுத் தொட்டுத் திரித்து இன்னொருத்தியோட உதடு இப்படி ஆகிவிட்டது. காலாலே கட்டையை அழுத்தி தறி போட்டதனாலே இன்னொருத்தியோட கால் இப்படி ஆகிவிட்டது. உங்க மருமகளாக வந்திருக்கிற இந்தப் பெண் அந்த மூன்றையுமே செய்யத் தெரிந்தவள். இன்னும் கொஞ்ச நாளிலே அவளுக்கு என்ன ஆகப் போகுதோ தெரியலை என்றார்கள்.

ராஜா பயந்து விட்டார். அம்மா நீ இளவரசனின் மனைவி. நீ எப்பவும் அழகாக இருக்க வேண்டும். அதனாலே நீ இனிமேல் வைக்கோலை திரிக்கவே கூடாது என்று உத்தரவு போட்டார் ராஜா. அவளை இக்கட்டான சூழ்நிலையிலேயிருந்து காப்பாற்றின அந்த மூன்று பெண்களும் சந்தோசமாகப் போய்விட்டார்கள்.

சுவாமி சின்மயானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். தன்னலம் மறந்து சுயலாபத்தை தியாகம் செய்யிறது வைக்கோலிலிருந்து தங்க இழையை நூற்கிறது மாதிரி என்கிறார் அவர்.

அது இருக்கட்டும் இப்ப நம்ம கதைக்கு வருவோம். ஒரு ராஜா தன்னுடைய மகனுக்கு சுயம்வரம் நடத்தினார். எல்லா தேசத்திலே இருந்தும் ராஜகுமாரர்கள் வந்திருந்தார்கள் ராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொள்ளலாம் என்கிற ஆசையிலே.

சுயம்வர மண்டபத்திலேயிருந்து எல்லா ராஜகுமாரர்களும் அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடி வந்து கொண்டிருந்தார்களாம்.

ஏன் இப்படி எல்லாரும் ஓடி வருகிறார்கள் என்று கேட்டார் ஒருத்தர், அதற்கு இன்னொருத்தர் விபரம் சொன்னார்.

“ராஜகுமாரியை இன்றைக்குத்தான் அவர்கள் நேரிலே பார்த்தார்களாம். அதுதான் இப்படி ஓடி வந்து கொண்டிருக்கிறார்கள்” என்றார்.

எத்தகைய பிரச்சினை குறுக்கிட்டாலும் எண்ணம், சொல், செயல் இந்த மூன்றாலும் முறியடிக்க முயற்சி செய்யுங்கள்! ~ பரமானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் சைவ சமயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அகற்ற வல்லார் யார்?

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்று வாழ்த்தப்பட்ட சைவ சமயம் இலங்கையில் படும் பாட்டைச் சொல்லி மாளா.

உலகில் இருக்கக்கூடிய சமயங்களில் தொன்மைக்குரிய சமயமாக விளங்கும் சைவ சமயம் இலங்கையின் ஆதிச் சமயம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் மிகச்சிறந்த சிவபக்தன் என்று அடையாளப் படுத்தப்படுகின்றான்.

இதனாலேயே இலங்கையை சிவபூமி என்று திருமூலர் புகழ்ந்துரைத்தார்.

இவ்வாறான பெருமைக்குரிய சைவ சமய வழிபாடு என்பதை வேதங்களும் ஆகமங் களும் தீர்மானிக்கின்றன.

வேதங்களும் ஆகமங்களும் கூறுகின்ற விதிப் பிரமாணப்படி சைவ ஆலய பூசை வழி பாடுகள் நடைபெற வேண்டும்.

இத்தகைய விதிப்பிரமாணங்களால், பிற சமய வழிபாடுகளினின்றும் சைவாலய பூசை வழிபாடுகள் வேறுபடுகின்றன.

அதாவது சைவ ஆலயத்தின் அருகில் மரணச்சடங்கு நடக்குமாயின் குறித்த ஆல யத்தின் கண்டாமணி ஒலி இசைக்காமல் பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டு ஆலயத்தின் திருக்கதவு பூட்டப்படும்.

மரணச்சடங்கு நிறைவுபெற்ற பின், கிரியா விதிகளுக்கமைய பிராயச்சித்தப் பூசை இடம் பெற்று அதன் பின்னரே நித்திய பூசை வழிபாடு கள் இடம்பெறும்.

இந்த நடைமுறை ஒரு நாள் பூசை இடம் பெறாமல் தடைப்படுமாக இருந்தாலும் பின்பற் றப்படும்.

எனினும் இந்த நடைமுறைகளை சைவ மக்கள் தவிர்ந்த வேறு எவரும் அறிந்திலர்.

அதிலும் குறிப்பாக உயர் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், படைத்தரப்பினர் என எவருக்கும் சைவ சமய வழிபாட்டு முறை களின் அடிப்படை கூடத் தெரியாது.

இதன்காரணமாக ஊரடங்கு அமுலில் இருந்த காலங்களில் சைவ சமயமும் சைவா லயங்களும் சிவாச்சாரியர்களும் பட்டபாடு சொல்லி மாளா.

சைவலாயத்தில் பூசை வழிபாடு நடைபெறா விட்டால் அது ஊருக்கு, அந்தப் பிரதேசத் துக்கு, நாட்டுக்கு நல்லதல்ல என வேதங்கள் எடுத்துரைக்கின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில் எத்த னையோ சைவ ஆலயங்கள் பூட்டப்பட்டுக் கிடக் கின்றன என்பது சைவ மக்களை வேதனைப் படுத்தியுள்ளது.

அதேநேரம் ஊரடங்குத் தளர்வு நீடிக்குமா அல்லது இடையில் இறுகிக் கொள்ளுமா? என்பதும் தெரியாமையால் பிராயச்சித்த அபி ஷேகங்களை நம்பிச் செய்ய முடியுமா? என்ற கேள்வியும் எழுகிறது.

என்ன செய்வது சைவ சமயத்தின் தலை வர்களை இதுவரை இந்த நாட்டின் ஜனாதிபதி சந்திக்கவில்லை எனும்போது; சைவ சமயத் தின் நிலைமை எப்படி என்பதை உணர முடியும்.

எதுவாயினும் எதிர்வரும் காலங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்படுமாயின், அதன் போதேனும் சிவாச்சாரியார்களுக்கு அனுமதி கொடுக்கின்ற முறையை ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக சைவ சமயத் தலைமைகள் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து நிலை மையை எடுத்துரைப்பது அவசியமாகும்.

### இரண்டாம், மூன்றாம் சுற்றுத்தாக்கம் குறித்து எச்சரிக்கை

# கொரோனாவை தடுக்க மருந்து கண்டுபிடிக்கவில்லை வைரஸ் தாக்கத்தை பூச்சியமாக்க முடியாது

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தொற்றுநோயின் இரண் டாம், மூன்றாம் சுற்று தாக் கம் குறித்த எச்சரிக்கை விடு க்கப்பட்டு வருகின்ற போதி லும் வைரஸ் சமூகப் பரவ லாக மாற்றம் பெறுவதை கட்டுப்படுத்த சகல சுகாதார நடவடிக்கைகளையும் முன் னெடுத்து வருவதாகக் கூறிய சுகாதார பணிப்பாளர் வைத் தியர் அனில் ஜாசிங்க,

'வைரஸ தாக்கத்திலிரு ந்து விடுபடுவதற்கான எந்த வித மருந்துகளையும்இன்ன மும் கண்டுபிடிக்காத நிலை யில் வைரஸ் தாக்கத்தை பூச்சியமாக்க முடியாது என வும் தெரிவித்தார்.

நாட்டில் ஊரடங்கு தளர் க்கப்பட்ட நிலையில் அடுத் ததாக சுகாதாரத்துறையின் நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கும் என வினவிய போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர மேலும் தெரிவிக் கையில்.இரண்டு மாதகால கட்டுப்பாடுகளின் பின்னர் மீண்டும் நாட்டைச் சாதா ரண நிலைமைக்குக்கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட் டது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பகுதிகளில் மக்களின் செய ற்பாடுகள் வழமையாக காண ப்படுவதாக எமக்கும் அறி விக்கப்பட்டது. மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத் திக்கொண்டு சுகாதார ஆலோ சனைகளை உரிய முறை யில் பின்பற்றி தமது நாளா ந்த செயற்பாடுகளை முன் னெடுக்க வேண்டும்.

அத்துடன் நாட்டில் கட்டுப் பாடுகள் குறைக்கப்பட்டாலும் கூட சுகாதார பரிசோதனை கள் முன்னெடுக்கப்படும். பி.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் மருத்துவப் பரிசோத னைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

இந்நிலையில் கொவிட் - 19 வைரஸ் தொற்று குறித்த இரண்டாம் மற்றும் மூன் றாம் சுற்றுத் தாக்கம் குறித்து மீண்டும் எச்சரிக்கை விடுக் கப்படுகின்றது.

சீனாவிலும், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் மீண்டும்கொவிட் -19 வைரஸ் தாக்கம் ஏற்பட்டு வருகின் றது.

ஆகவே இலங்கையி லும் வைரஸ் தொற்றின் இர ண்டாம் மற்றும் மூன் றாம் சுற்றுக்கள் குறித்த அச்சு றுத்தலுள்ளது. ஆனால் சமூ கத் தாக்கமொன்றை உரு வாக்காத வகையில் சுகா தார அதிகாரிகள் முழுமை யான கட்டுப்பாட்டு நடவ டிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையில் இரண் டாம் சுற்றுத் தாக்கமொன்றை தடுக்க எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் கொவிட் -19 வைரஸ் தொற்று நோய் முற்றாக நீங்கிவிட் டது என்றோ தாக்கம் பூச்சிய மாகி விட்டதென்றோ எம் மால் கூறவே முடியாது.

கொவிட்-19 தொற்று நோய்க்கு இன்னமும் மருந் துகளோ, நோய் எதிர்ப்பு தடுப்பூசிகள் எதனையுமே இன்னமும் கண்டறியாத நேரத்தில் இவ்வாறான நோயைத் தடுக்க முடியாது.

எனவே மீண்டும் நோய் உருவாக்கக் கூடிய வாய்ப் புகள் அதிகமாக உள்ளதெ ன்ற எச்சரிக்கையை எம் மால் விடுக்க முடியும். எனவே மக்கள் தமது செயற்பாடுகள் மூலமாக நிலைமைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாது இலங் கையில் கட்டுப்பாடுகள் விதி க்கப்பட்டாலும் கூட சுற்று லாத்துறையை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிக்கப் படுவதில் பல சவால்கள் உள்ளன. விமான நிலை யங்கள் மீண்டும் திறக்கப் படும் நிலையில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மீண் டும் இலங்கைக்கு வருவார் கள்.

அவ் வாறிருக் கையில் விமான நிலையங்களில் பி.சி.ஆர்.இயந்திரங்களை பொருத்துவதால் முழுமை யாக சாதகமான விளைவு களை எதிர்பார்க்க முடியாது. பி.சி.ஆர்.பரிசோதனைகள் செயயும் வேளைகளில் சாதா ரண உடல்நிலையை வெளிப படுத்தி பின்னர் சில நாட்க ளில் நோய்த்தாக்கத்தை காட்டும்.

ஆகவே சுற்றுலாத்துறை யினரை தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்தி ருக்க முடியாது. அது அவர்க ளின் பயணங்களை பாதிக் கும். எனவே இந்த பிரச்சி னையை அரசாங்கம் எவ் வாறு கையாளப்போகின்றது என்ற கேள்வியுள்ளது. எனவே இந்த விடயங்களை மிகக் கவனமாக கையாள வேண்டும்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தை விளையாட்டுப் போட்டியைப் போன்று சுகாதார அமைச்சர் கருதுகிறார்- மங்கள

(கொழும்பு)

மனித உயிர்களைக் காப் பதற்காக இன்னமும் உண் மையானவீரர்கள்கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரா கக் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கையில், சுகா தார அமைச்சர் இதனை ஒரு பாடசாலை விளையாட் டுப்போட்டி என்று கருதிக் கொண்டிருக்கிறார் என முன் னாள் நிதியமைச்சர் மங் கள சமரவீர கடுமையாகச் சாடினார்.

இது குறித்து தனது உத் தியோகபூர்வ டுவிட்டர் பக் கத்தில் மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது,

உலகளாவிய ரீதியில் இன்னமும் கொரோனா வைரஸ பரவலுக்கு எதிரான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், எமது சுகாதார அமைச்சர் தங்கப்ப தக்கத்தையும், வெள்ளிப் பதக்கத்தையும் அதிபர் மற் றும் உப அதிபருக்கு இடை யில் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு பாடசாலை விளையாட் டுப்போட்டி என்று கருதிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் உண்மையான வீரர்கள் இன்னமும் மனித உயிர்களைக் காப்பதற்காக கொரோனா வைரஸ் பரவ லுக்கு எதிராகக் கடுமையா கப் போராடிக் கொண்டி ருக் கின்றனர்.

சுகாதார அமைச்சர் பவி த்ரா வன்னியாராச்சி குறித்து வெட்கமடைகிறேன் என தெரிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தன் கடமையைச் சரிவரச் செய்யும் எவரும் ஒரு போதும் உலகின் மீது அதிருப்தி கொள்வ தில்லை.

-கதே

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிரு ந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** அராலிப் பிரதேசம், செட்டி யார் மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம், அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்** தில் துட்டுவாகை, முகத்தான் குளம் 2ஆவது பண்ணை, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங் களிலும்,

**மன்னார் பிரதேசத்தில** காலை 10 மணியிலிருந்து 2 மணிவரை உயிலங்குளத் திலிருந்து திருக்கேதீஸ்வரம் வரை, வங்காலைப் பிரதே சம், சீனத்துறைமுகம் வட்டு பித்தன்மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறைவனின் மகிமையை காணவேண்டுமென்றால்...



இறைவன் தானே ஒளிர்பவரும் தனித்து இயங்குபவரும் ஆவார். அவர் நம் கண்களுக்கு அப்பாற்பட்டவர். நம் கண்களில் புறப்பொருட்களை மட்டுமே பார்க்க முடியும். ஆனால் உண் மைப் பொருளை அகத்தினால் தான் பார்க்க முடியும். இதற்கு வேண் டிய தகுதிகளை நாம் நினை வில் கொள்ள வேண்டும். பார் வையை உள்ளே திருப்பி ஆன் மாவை அடையும் ஆவல்தான் இந்தத் தகுதி. இயற்கையில் நாம் காணும் அழகிய பொருட் கள் எல்லாம் மிக நல்லவை தான. இருந்தாலும் இறைவனைக காண்பதற்கு அது சரியான வழிய ல்ல. பார்வையை எப்படி உள்ளே திருப்புவது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். வெளியே பார்க்க வேண்டுமென்றால் கண்க ளின் ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

நெரிசலான தெருவில் நடக் கும் போது வண்டிகளின் ஓசையின் காரணமாக பக்கத்தில் இருப்பவர் பேசுவது உங்கள் காதில் சரியாக விழுவ தில்லை. இதற்குக் காரணம் மனம் வெளியே பார்ப்பதால் பக்கத்தில் இருப்பவர் பேசுவது கேட்பதில்லை. அதேபோல் நம்மைச் சூழ்ந்திருக்கும் உலகிலும் ஓசை அதிகமாக இருப்பதால் அது நமது மனதை வெளியே இழுக்கிறது. அப்படியென்றால் நாம் எப்படி ஆன்மாவைப் பார்ப்பது என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அதற்கு மனதின் வெளிப் போக்கை நிறுத்த வேண்டும். இதைத்தான் பார்வையை உள்ளே திருப்புவது என்று கூறுகிறோம். இப்படிச் செய்தால்தான் உள்ளேயிருக்கும் இறைவனின் மகி மையை நாம் காண முடியும்.

# சீன-இந்தியப் படையினர் மோதல்!



## எல்லையில் பரபரப்பு

(டில்லி)
இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் இந்திய மற்றும் சீனப் படைகளுக்கு இடையே திடீரென மோதல் ஏற்பட்டதால் அங்கு பரபரப்பான நிலை ஏற்பட்டது.

சிக்கிம் மாநிலத்தின் நாகு-லா பகுதியில் அமைந்துள்ள எல்லையில் கடந்த சனிக்கிழமை வழக்கம்போல இந்திய வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அங்கு ரோந்துப் பணிக்காக வந்த சீனப் படையினர், இது தங்கள் நாட்டிற்குச் சொந்தமான பகுதி எனக்கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதம் முற்றிய நிலையில் இந்திய-சீன பாதுகாப்புப் படையினர் மாறிமாறி கற்களை வீசித் தாக்குதல் மேற்கொண்டனர். மேலும், இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் கைகளால் தாக்கிக்கொண்டு போரில் ஈடுபட்டனர்.

இந்தப் போரில் 150 பேர் ஈடுபட்டதாகவும் அதில் 4 இந்திய வீரர்களும் 7 சீன வீரர்களும் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகின. இதனால் உடனடியாக இந்தியப் படைகளும் சீனப் படைகளும் அங்கு விரைந்து சென்றதால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

இதையடுத்து, இரு நாடுகளின் இராணுவத்தைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு இரு தரப்பினரும் அமைதியான முறையில் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள சமரசம் செய்யப்பட்டது. இதனால் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த சீனப் படையினர் வெளியேறினர்.

இதையடுத்து குறித்த பகுதியில் கூடுதல் வீரர்கள் குவிக்கப் பட்டுள்ளதாக இந்திய இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# கொலம்பிய படகுகளைக் கைப்பற்றி வெனிசுவெலா இராணுவம் அதிரடி

## துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மீட்பு



(கராகஸ்)
வெனிசுவெலா இராணுவத்தினர் ஓரினோகோ நதியில் மேற்கொண்ட ரோந்துப் பணியின்போது கைவிடப்பட்ட மூன்று கொலம்பிய படகுகளை கடந்த சனிக்கிழமை கைப்பற்றியுள்ளதாக அந் நாட்டு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த படகுகளில் இயந்திரத் துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும் பொருத்தப்பட்டிருந்ததாகவும் எனினும் இதன்போது படகில் எவரும் இருக்கவில்லை என்றும் வெனிசுவெலா பாதுகாப்பு அமைச்சகம் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.




இது தொடர்பில் கொலம்பிய வெளிவிவகார அமைச்சகம் எவ்வித பதில்களையும் இன்னும் தெரிவிக்கவில்லை.

வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்கு கூலிப் படையினரால் முன்னெடுக்கப் படவிருந்த சதி முயற்சியானது முறியடிக்கப்பட்டிருந்தது.

இதன்போது அமெரிக்க முன்னாள் இராணுவ வீரர் இருவர் உள்ளிட்ட குழுவினர் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களுக்கு பயங்கரவாதம், சதி, போர் ஆயுதங்களை சட்டவிரோதமாக கடத்தல் மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அதனால் 25-30 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்கக்கூடும் என்றும் வெனிசுவெலா சட்டமா அதிபர் ஜெனரல் தாரெக் வில்லியம் சாப் கூறியிருந்தார். (ஜ-2)

# சர்வதேச மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும்

## ஐ.நா.செயலாளர் கோரிக்கை

(ஜெனிவா)
சர்வதேச ரீதியாக இடம்பெறும் அனைத்து மோதல்களும் நிறுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியா குட்ரேரஸ் கோரிக்கை விடுத்தார்.

ஐ.நா.சபையின் 15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்பு சபையினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமெரிக்காவும் சீனாவும் ஆதரவினை தெரிவித்திருந்தன.

எனினும் சில மணி நேரத்தில் அமெரிக்கா வழங்கிய ஆதரவை திருப்பிப் பெற்றது.

கொரோனா வைரஸ் தொற்றினை ஒழிப்பதற்கு ஏற்றவாறு சர்வதேச ரீதியாக ஏற்படும் மோதல்கள் இடைநிறுத்தப்பட வேண்டுமென அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. குறிப்பாக சீனா மற்றும் அமெரிக்காவிற்கு இடையிலான மாறுபட்ட கருத்து காரணமாக முடிவுகளேதும் எட்டப்படாத நிலையில் பிரேரணை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-2-8)

# ஜேர்மனியில் கட்டுப்பாடுகள் தளர்வு; வேகமெடுக்கும் கொரோனா வைரஸ்



(பேர்லின்)
ஜேர்மனியில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பிறகும், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலின் தாக்கம் அதிகமாக உள்ளதாக, பொதுச் சுகாதார நிறுவனமான ரொபர்ட் கோச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

முடக்க நிலை தளர்த்தப்பட்டு சில நாட்களே கடந்துள்ள நிலையில், தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்ட ஒரு நபரின் மூலம் நோய்த்தொற்று தற்போது ஒரு வருக்கு மேல் பரவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடக்க நிலையை முழுவதுமாக நீக்கக்கோரி கடந்த சனிக்கிழமை ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

தொற்று வீதம் என்பது ஒரு நோயின் பரவலுக்கான திறனை மதிப்பிடுவதற்கான ஒரு வழியாகும். இது ஒரு நிலையான எண் அல்ல, ஏனெனில் இது நமது நடத்தை மாறும்போது அல்லது நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும் போது மாறுகிறது.

பரவலைக் கண்காணிப்பதற்கான மூன்று முக்கியமான அளவீடுகளில் இதுவும் ஒன்றாகும். ஏனையவை அறிகுறிகளின் தீவிரத்தன்மை மற்றும் தொற்றுகளின் எண்ணிக்கை என்பனவாகும்.

கடந்த சனிக்கிழமையன்று வெளியிடப்பட்ட பொதுச் சுகாதார நிறுவனத்தின் அறிக்கை, தொற்று வீதம் 1.1 என மதிப்பிட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை 1.13ஆக இருந்தது. கடந்த மூன்று வாரங்களில் இந்த எண்ணிக்கை 1 இற்கும் குறைவாகவே உள்ளது.

இந்த மதிப்பீட்டில் 'ஒரு அளவு நிச்சயமற்ற தன்மை' இருப்பதாக நிறுவனம் ரொபர்ட் கோச் நிறுவனம் கூறியது. மேலும் இந்த வீதம் எதிர்வரும் நாட்களில் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-2)

# ஊரடங்கைத் தளர்த்தக்கோரி அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம்




## 10 பேர் கைது

(கன்பெரா)
அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில், ஊரடங்கைத் தளர்த்துமாறு வலியுறுத்தி, 100 இற்கும் மேற்பட்டோர் மெல்போர்னிலுள்ள பாராளுமன்ற வளாகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்றுகையிட முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்களை, பொலிஸார் தடுத்ததை தொடர்ந்து, இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, 10 ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்த பொலிஸார், அவர்கள் மீது தனிநபர் இடைவெளியை கடைப்பிடிக்கத் தவறியது, பொலிஸாரை தாக்கியது உள்ளிட்ட குற்றங்களுக்காக வழக்குப்பதிவு செய்தனர். (ஜ-2)

## பாடசாலைகளை...

களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு மாத காலமாகலாம் என கல்வி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த அவர், சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் அடிப்படையிலேயே பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் எனக் கூறினார்.

மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட நாளில் மீண்டும் திறக்கப்படும் என்றும், பாடசாலை நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த தினத்தை அறிவித்த பின்னர், நாடு பூராகவுமுள்ள பாடசாலைகள் தொற்று நீக்கம் செய்யப்பட்டு இன்னும் 04 நாட்களுக்கு மூடப்படும் என்றும் முதலில் அதிபர், ஆசிரியர்கள் உட்பட கல்விசாரா ஊழியர்கள் பாடசாலைகளுக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

இதன் பின்னர் உயர்தரம், சாதாரண தரம் மற்றும் அதற்கு கீழுள்ள தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் படிப்படியாக பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-3)

## நல்லூர் முத்திரை...

களில் இந்த சம்பவம் வாள்வெட்டுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பாரிய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மதியம் 2.00 மணியளவில் 10 மோட்டார் சைக்கிளில் புங்கன்குளம் வீதி வழியாக வாள்வெட்டுக் குழுவினர் சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்றவர்கள், முத்திரைச் சந்திக்கு சென்று அவ்விடத்தில் நின்ற 2 ஆட்டோவை சேதப்படுத்தியதுடன், இருவர் மீது வாளால் வெட்டியுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்காகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,101)

## கொரோனா...

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "இராணுவம் என்ற ரீதியில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப எம்மால் முடிந்த அனைத்தையும் மேற்கொள்ளத்தான் நாம் எதிர்பார்த்துள்ளோம். இதற்கான செயற்பாடுகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோம்.

ஊரடங்குச் சட்டம் தற்போது ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைவாக தற்போது தளர்த்தப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைமைக்கு கொண்டு வரும் நோக்கில்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், கொரோனா அச்சுறுத்தல் இன்னும் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை.

உலகின் ஏனைய நாடுகளை பார்க்க, இலங்கையில் இதன் தாக்கம் குறைவாக இருந்தாலும், இந்த நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட்டு செயற்படுவது எம் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட பொறுப்பாகவே கருதப்படுகிறது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், அனைவரும் வெளியில் நடமாட வேண்டும் என்ற அர்த்தமில்லை. நாம் சமூகப் பொறுப்புடன் செயற்பட்டால்தான், நாமும் நமது சமூகமும் எதிர்கால ஆபத்திலிருந்து விடுபட முடியும்.

இராணுவம் என்ற ரீதியில் நாம் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பினை தொடர்ந்தும் வழங்கத் தயாராகவே இருக்கிறோம் எனக் கூறினார். (ம-3)

## கூட்டமைப்பின்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழரின் இன விடுதலைக்காக அதியுட்ச தியாகங்களை செய்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை தொடர்ச்சியாக கூறி வருகின்றார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் பல தடவை என்னால் சுட்டிக் காட்டப்பட்டதை தாங்கள் அறிவீர்கள். இந்த விடயம் தொடர்பாக இனிமேல் கதைக்க வேண்டாம் என்றும் என்னால் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால் 08.05.2020 அன்று ஒரு சிங்கள ஊடகத்திற்கு இதேபோன்று கருத்து கூறியிருக்கின்றார். இது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருப்பினும் அவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்ற காரணத்தினால் தமிழ் மக்கள் மிகவும் கோபம் அடைந்துள்ளனர்.

நானும் அவருடைய கருத்தை எதிர்க்கின்றேன். சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கூறும் கருத்துக்களை நிறுத்த வேண்டும்.

அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக பேச்சாளர் பதவி அவரிடத்திலிருந்து வேறு நபர்களுக்கு வழங்க வேண்டும்.

இது தொடர்பாக முடிவெடுப்பதற்காக இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தினை கூட்டும்படி கேட்டுக் கொள்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,285)

## அமைச்சுக்களு...

வடக்கு - கிழக்கில் மகாவலித் திட்டத்தின் ஊடாக தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்து வரும் மகாவலி அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஏ.கே.எஸ். பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலயத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளும் அவர்களது வாழ்வாதாரத்தை வழங்கும் கடல் மற்றும் வயல் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு அந்த இடங்களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர் குடியமர்த்தப்பட்டும் கடற்தொழிலில் ஈடுபடவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையிலேயே மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குப் பொறுப்பான மகாவலி அமைச்சுக்கு முன்னாள் இராணுவ அதிகாரி செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய செயலாளர்களின் பெயர்களும் அமைச்சுக்களும் வருமாறு,

1. திருமதி எஸ்.எம். மொஹம்மட் - நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு
2. ஜே.ஜே ரத்னசிறி - பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
3. எஸ். ஹெட்டியாராச்சி - சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சு
4. எச்.கே.டீ.டபிள்யு.எம்.என்.பீ.ஹபு ஹின்ன - மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு
5. திருமதி ஜே.எம்.பீ. ஜயவர்த்தன - உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன் பேணல் அமைச்சு
6. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஏ.கே.எஸ். பெரேரா - மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
7. மேஜர் ஜெனரல், மருத்துவ நிபுணர் சஞ்சீவ முனசிங்க - சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு (ம-3)

## சுமந்திரனின்...

கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கொண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இப்படியான கருத்துக்களை சொல்வதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவருடைய கருத்தை வன்மையாக கண்டிக்கின்றோம். ஆயுதப் போராட்டத்தில் பொதுமக்கள், போராளிகள் ஒட்டுமொத்தமாக உயிரை அர்ப்பணித்து உள்ளார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் உலகளாவிய ரீதியில் எங்களுடைய இனப்பிரச்சினை வரலாறாக பதியப்பட்டுள்ளது. ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் இனப்பிரச்சினை சார்ந்த விடயங்களை இன்றைக்கு இலங்கை அரசாங்கத்துடன் பேசும் ஒரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

இந்த ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான், எமது இனப்பிரச்சினை தொடர்பான முக்கிய விடயங்கள் விஸ்வரூபம் எடுத்துள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அந்த வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்தை வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாவதற்கு காரணமான நோக்கத்தை தனது கருத்தின் ஊடாக எம்.ஏ.சுமந்திரன் சீர்குலைத்துள்ளார்.

தமிழரசுக் கட்சி அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் இந்த விடயத்தில் நிச்சயமாக ஒரு சரியான முடிவை எடுக்கும்" என்றும், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## அரசியல் கட்சி...

குறிப்பாக கோவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமைகள் கட்டுப்பாட்டில் உள்ளதா என்பது குறித்து ஆராயப்பட்டதுடன் மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் எவ்வாறானதாக அமைந்துள்ளது என்ற காரணிகளை கருத்தில் கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுக்க ஆணைக்குழு சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவது குறித்து ஆணைக்குழுவின் தீர்மானம் எவ்வாறானது என்பதை ஆணைக்குழு இதன்போது அறிவிக்கும் என கூறப்படுகின்றது.

எனினும் இப்போதுள்ள சூழலில் தேர்தலை நடத்த வேண்டாம் எனவும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னர் சகல கட்சிகளுக்கும் சமமான தேர்தல் பிரசார சூழல் ஒன்றினை உருவாக்கிக் கொண்ட பின்னர் தேர்தல் குறித்த தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும் என எதிர்கட்சிகள் வலியுறுத்தவுள்ளதுடன், அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்கி வருவதாக கூறி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்ற காரணிகள் குறித்தும் இன்றைய தினம் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் கூறுகின்றன. (ம-3)

## சந்தைகளுக்கு...

பதை கண்டறிந்து பரிசோதனைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பேருந்து, முச்சக்கரவண்டிகள் மற்றும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் தளங்கள், மெனிங் சந்தை போன்ற மக்கள் அதிகம் ஒன்றுகூடும் இடங்களில் உள்ளவர்களை அடிக்கடி எழுமாறாக பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கோவிட் - 19 ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியுடன் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இவற்றைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேருந்து, முச்சக்கரவண்டிகள் மற்றும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் தளங்கள், மெனிங் சந்தை போன்ற மக்கள் அதிகம் ஒன்றுகூடும் இடங்களில் உள்ளவர்களை அடிக்கடி எழுமாறாக பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வைரஸ் பரவலை தடுப்பதற்கு இத்தகைய இடங்களில் ஒன்றுகூடுபவர்களுக்கு அறிவூட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பாடசாலை பிள்ளைகள் நடந்துகொள்ள வேண்டிய விதம் குறித்த வழிகாட்டல் சுகாதார அமைச்சினால் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## 863...

பட்டுள்ளது.

இதேவேளை, கோவிட் - 19 நோயாளர்களில் மேலும் 22 பேர் குணமடைந்துள்ளதையடுத்து, தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 343 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, தொடர்ந்தும் 511 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றினால் நாட்டில் இதுவரை 9 மரணங்கள் பதிவாகியுள்ளன.(ம-3)

## புலிகளின்...

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைவேலிப் பகுதியில் நேற்றைய தினம் காணி ஒன்றில் இருந்து விடுதலைப் புலிகளின் சீருடைகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த நிலத்தில் இருந்து பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகவும், அது குறித்து காணி உரிமையளார் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார் அந்த பெட்டியினை எடுத்து பார்த்தபோது விடுதலைப் புலிகளின் சீருடைகள் உள்ளிட்ட ஆவணங்கள் சில காணப்பட்டுள்ளன.

இதன்போது விடுதலைப் புலிகளின் நான்கு சீருடைகளும் அவற்றுக்கான தொப்பிகளுடன் பெண்போராளிகள் பயன்படுத்தும் இடுப்பு பட்டி மற்றும் சிவில் உடைகள் சிலவற்றுடன் ஒளிப்பட கொப்பி, ஒலிப்பதிவு கெசட் ஒன்று, நான்கு அல்பங்கள் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

இவை போர் நடைபெற்ற காலத்தின் போது விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

மீட்கப்பட்ட அனைத்து பொருட்களும் இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,281)

## மீண்டும் ஆரம்...

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

எனினும் நாட்டுக்குள் வரும் சகல பயணிகளையும் பரிசோதனை செய்யும் விசேட வேலைத் திட்டம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


விமான சேவைகளை வழமைக்கு கொண்டு வருவது குறித்து அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், "விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையினால், நாட்டுக்கு கிடைக்கவிருந்த மிகப்பெரிய வருமானம் இல்லாது போயுள்ளது. குறிப்பாக சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## சுமந்திரன் கூறிய கருத்தானது

# சிங்கள மக்களுக்கு தமிழர்கள் தொடர்பில் தவறான தோற்றப்பாட்டையே உருவாக்கும்

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சாடல்



(யாழ்ப்பாணம்)

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு சுமந்திரன் வழங்கியிருந்த நேர்காணலைக் கண்டேன். அதிர்ச்சி அடைந்தேன். இவ்வாறானவர்களின் இத்தகைய பேச்சுக்களினால் சிங்கள மக்கள் மத்தியில் எமது போராட்டம் தொடர்பாகவும் எமது அரசியல் செயற்பாடு தொடர்பாகவும் தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன் சிங்கள அரசாங்கங்கள் தற்போது செல்லும் பாதை சரியென்று சிங்கள மக்கள் நினைக்கவும் வாய்ப்புண்டு என வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் எமக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் கூறியுள்ளார். அப்படியென்றால் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எப்படி பாராளுமன்ற உறுப்பினராக அவர் இதுகாறும் இருந்திருக்கமுடியும்? தாய் பகை குட்டி உறவு என்ற கதையாக வல்லவா இருக்கின்றது? இவ்வாறான கருத்தை உடையவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அரசியல் பிரவேசம் செய்திருக்கக் கூடாது. தனது கருத்துக்களை வெளிப்படையாக வட மாகாணத்திலோ கிழக்கு மாகாணத்திலோ மக்களுக்குக் கூறி சுயேட்சையாக வாக்குக் கேட்டிருக்கலாம் அல்லது சிங்களக் கட்சிகள் ஊடாக வாக்குக் கேட்டிருக்கலாம். யாழ் தமிழ் மக்களின் தோளில் ஏறி பயணம் செய்துகொண்டு பெரும்பான்மையினரின் அடிவருடிபோல் வேஷம் ஆடுவது சகிக்க முடியாது இருக்கின்றது. எனது பழைய மாணவரா இவ்வாறு பேசுகின்றார் என்று வெட்கமாக இருக்கின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன நோக்கத்திற்காக யாரால் உருவாக்கப்பட்டது என்பது எல்லா மக்களும் அறிந்தது. தமிழ் மக்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களுக்கும் இதுபற்றி தெரியும். ஆனால் சுமந்திரன் போன்றவர்கள் தான் உண்மையை அறியாமல் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்கின்றார்கள் போல் தெரிகின்றது. இதனால் எதைச் சாதிக்கப் பார்க்கின்றார்? ஜனநாயகரீதியாக தமிழர்களின் உரிமையை வெல்லவேண்டும் என்ற அபிலாசையில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமே இதனால் தடம் மாற்றிக் காட்டப்படுகின்றது. இதனால் சிங்கள மக்கள் மத்தியில் உண்மை நிலைமையை மறைத்து தவறான புரிதல்களை ஏற்படுத்த சுமந்திரன் முயல்கின்றாரோ என்று எண்ண வேண்டியுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு முந்தையது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிறார். சுமந்திரனுக்கு வரலாறு தெரியவில்லையா அல்லது தெரியாதது போல் நடிக்கின்றாரா? அப்படி நடிப்பதால் நல்லவர் என்ற பெயரை சிங்களவர்கள் மத்தியில் ஒருபோதும் அவர் பெறமுடியாது. அவருக்குத் தமிழ் மக்களின் உணர்வுதான் புரியவில்லை என்றால் வரலாறுமா தெரியவில்லை. 1949இல் உருவாக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது 2001 இல். 2001இல் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில்தான் அவர் பேச்சாளராக இருக்கிறார் என்பதை அவருக்கு நினைவு படுத்தவேண்டியுள்ளது.

மற்ற இனங்களை மதிப்பது வேறு. அவர்களின் அடிமையாக வாழ விரும்புவது வேறு. மற்ற இனங்களை திருப்திப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு அவர்களின் அடிவருடியாகக் காட்டிக்கொள்வதை சுமந்திரன் பெருமையாக நினைக்கிறார் போல் தெரிகின்றது. இது சிங்கள மக்களுக்கு எம் தொடர்பில் தவறான தோற்றப்பாட்டையே உருவாக்கும். தமிழர்கள் அடிமையாக இருப்பதை அதிர்ஷ்டமாக நினைக்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும். சுமந்திரன் அவ்வாறு அடிமையாக இருப்பதை பெருமையாகக் கருதலாம். ஆனால் தமிழர்கள் சார்பில் பேசும் போது அவ்வாறு பேச அவருக்கு உரித்தில்லை.

அது மாத்திரமல்ல, அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தோல்வியை தழுவிய நிலையில், விரக்திகொண்ட தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியது வரலாறு. அதனை நாம் எம் விருப்பு வெறுப்புக்களுக்காக மாற்றிச் சொல்ல முடியாது. கொழும்பில் சுகபோகமாக வாழ்ந்துவிட்டு, இப்போது வந்து வடக்கு கிழக்கு மக்களின் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் பலவீனப்படுத்தவும் எவருக்கும் எந்த உரிமையும் இல்லை. வேண்டுமானால் இந்தமக்களை புரிந்து அவர்களுக்காக அவர்கள் கோரிக்கையின் பேரில் குரல் கொடுப்பது உத்தமமானது. இல்லை என்றால் விலகி இருந்து சுமந்திரன் தாம் விரும்பும் சிங்களமக்கள் மத்தியில் போட்டியிட்டு அரசியல் பதவிகளை வகிப்பது நல்லது.

சிங்களவர்களுக்கு எமது விடுதலைப் போராட்டம் தொடர்பில் புரிதலை ஏற்படுத்த வேண்டும். பிரபாகரன் ஏன் ஆயுதம் ஏந்தினார் என்பதை நன்கு விளங்கிக் கொண்டுள்ள சிங்கள மக்கள் பலர் உள்ளனர். தமிழர் தம் போராட்டங்களை, நியாயங்களைப் பற்றிப் பேசுகின்ற சிங்களத் தலைவர்கள் தெற்கில் இருக்கின்றார்கள். அப்படியிருக்க தமிழர் என்று அடையாளப் படுத்திக் கொண்டு, போராட்டத்தையும் அதன் ஒப்பற்ற தியாகங்களையும் இப்படி கொச்சைப்படுத்தும் தமிழின சாபக்கேடுகளை அடியோடு ஒழிக்கவேண்டும். தமிழ் மக்கள் இதில் மிகக்கடுமையான விழிப்புணர்வு கொள்ளாவிடின் தென்னிலங்கை பேரினவாதிகளைக் காட்டிலும் இத்தகைய மிதவாத நடிப்பாளர்கள் எம்மைக் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள். அதே கேள்வி சிங்களத்தில் என்னிடம் கேட்டிருந்தால் பிரபாகரனின் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளால் முற்றும் முழுதுமாக உருவாக்கப்பட்டது என்று கூறியிருப்பேன் என்றுள்ளது. (ம-3)

# சுமந்திரன் கூறிய கருத்து மக்களை ஏமாற்றும் செயல்

## அனந்தி சசிதரன் கண்டனம்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளையும் தமிழர் தியாகங்களையும் வைத்து வாக்கு பெற்றுவிட்டு பிரபாகரன் ஆயுதம் ஏந்தி போராடியது தவறு என்றால் சுமந்திரன் சிங்கள மக்களிடம் வாக்குகளை பெற்றிருக்கலாம் என அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளையும், தமிழரின் தியாகங்களையும் பயன்படுத்தி அதன் மூலம் வாக்குகளை பெற்றுவிட்டு பிரபாகரன் ஆயுதம் ஏந்தி போராடியதை நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் குறிப்பிட்டிருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறாயின் அவர் ஐந்து வயதிலிருந்து பழகிய சிங்கள மக்களிடமிருந்து வாக்குகளை பெற்று பாராளுமன்றம் போயிருக்கலாம் என அவர் குறிப்பிட்டார்.

தந்தை செல்வாவினுடைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரையான போராட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளாத ஒருவராகவே காட்டிவிட்டு வாக்குகளிற்காக போராளிகளின் தியாகங்களையும்தமிழர்களின் அர்ப்பணிப்புக்களையும் பயன்படுத்தி வாக்குகளை பெற்றுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கடும் கண்டனங்களை தெரிவித்த அனந்தி சசிதரன், விடுதலைப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு தெரிவித்தமையையும், அதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்ததும் தற்போது இந்த அரசாங்கத்திற்கும் அவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது மக்களை ஏமாற்றும் செயலாகவே நான் பார்க்கின்றேன் எனவும் தெரிவித்தார். (ம-3,312)


## வேலையாள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டமொன்றில் காவலுக்கு ஆள்தேவை. தோட்டங்களில் தனியாளாக வேலை செய்து பழக்கம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் காவலுக்கு மட்டும் மாதத்துக்கு ரூபாய் 12,000, மேலதிக வேலைகளுக்கு வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். குடும்பமாகத் தங்குவதற்கான வசதி உண்டு. தேசிய அடையாள அட்டை, கிராமசேவையாளரின் அத்தாட்சிக்கடிதம் மேலதிக சிபாரிசுகள் தேவை. (C-9576)

தொலைபேசி : 077 168 1697 / 077 113 3667



## ஆண்டு 2020 இல் அனைவருக்கும்

# வேலை வாய்ப்பு



எமது ஸ்தாபனத்தின் மூலமாக ORGANIC HOME GARDEN PROGRAMME (இரசாயன கலப்பற்ற வீட்டுத்தோட்டம்) வட மாகாணம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வீட்டுத்தோட்டம் வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் செய்து பயன் அடைய முடியும். இதற்கு மேல் பங்குபற்றுபவாகள் 8 வயதிலிருந்து அதற்கு மேல் எவ் வயதினரும் பங்குபற்றலாம்.

இதில் பங்குபற்றி வீட்டுத் தோட்டத்தை செய்பவர்கள் மாதாந்தம் ரூபாய் 20,000 தொடக்கம் வருமானத்தை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பாக வயது குறைந்த மாணவ மாணவியர் (Students) பங்குபற்றுவதன் மூலம் அவர்களது எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதாக அமையும்.

ORGANIC தோட்டம் உங்கள் வீட்டு முற்றத்திலேயே செய்வதாகும். இதற்கு எந்தவிதமான விவசாய சம்பந்தமான அறிவோ அனுபவமோ தேவை இல்லை. இது உங்கள் வீட்டு முற்றத்தில் BAGக்குகளின் மூலமாக செய்யலாம். இந் நிகழ்ச்சித்திட்டம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக இலாபம் மீட்டும் தொழிலாக நடைபெற்று வருகின்றது.

இவ் விவசாய நடவடிக்கை மூலம் உங்கள் வீட்டுக்கு தேவையான மரக்கறி வகைளை நீங்களே இரசாயன கலப்பில்லாத உரத்தினைக் கொண்டு செய்வதன் மூலம் உங்கள் குடும்பத்தாரை நோய் அற்றவராக உருவாக்கலாம்.

இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் எம்மை அழைத்தால் உங்கள் கிராமங்களுக்கு வருகை தந்து இது பற்றிய விளக்கங்களை தரமுடியும்.

மேலதிக தொடர்புகள் :

வறுமை ஒழிப்பு சமூகநல அமைப்பு

தொலை பேசி :- 076 167 6824, 076 769 9191

எமது ஸ்தாபனத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் விற்பனை பிரதிநிதிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.

(2697)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.